செந்தமிழ்ச் செல்வி

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக

மணிவிழா ஆண்டு

1920 – 1980



சிலம்பு-ருச] வள்ளுவர் ஆண்டு-உ0கக மாசி, Mar. 80 [பரல்-எ.

'செந்தமிழ்ச் செல்வி'

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

உள்ளுறை

கழக விழா மலர்களும் பயனும்	ஙஉக
தமிழெழுத்து மாற்றம் தன்மானத் தந்தையார் கொள்கையா?	ஙஉரு
தெ. பொ. மீ.யின் திரிபாராய்ச்சி	ஙஙங
அந்த உணர்வு எங்கே? 2	ஙஙஎ
மழையே! மனமிரங்காயோ?	ஙசக
தெலுங்குப் பழமொழிகள்	ஙசச
திகட சக்கரம்	ஙசஎ
மொழிகளில் சிறந்தது முத்தமிழே	ஙருஉ
முன்னிலைப் பெயர்கள்	ஙருங
அருட்கவியாரின் வடமொழிப் பற்று	ஙருஎ
குடந்தை மாமகம்	ஙருஅ
தமிழில் பதிப்புக்கலை	ஙருகூ
இந்தியாவில் ஞாயிறு மறைவு	ஙசுஉ
கோட்டையூர் மு அழ. அழகப்பச் செட்டியார் மறைவு	ஙசுங
செய்திகளும் குறிப்புக்களும்	ஙசுரு
மதிப்புரை	ஙசுகூ

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு உ௲கக, தை மார்ச்சு 1980	பரல்
ருச		எ

கழக விழா மலர்களும் பயனும்

கழகத்தை நிறுவிய அமைச்சர் வ. திருவரங்கம் பிள்ளை அவர்கள் திருநெல்வேலியில் மெய்கண்ட சாத்திர மாநாட்டை 1941இல் (மேத் திங்கள் 21 முதல் 27 வரை) ஏழு நாட்கள் மிகவும் சிறப்புற நடத்தினர்கள். அதனைத் திறந்துவைத்தவர் ஒய்வு பெற்ற மாவட்ட நீதிபதி தி. அ. சுப்பையா பிள்ளை அவர்களும் வரவேற்புரை நிகழ்த்தியவர் கழகத் தலைவர் திருவாளர் ப. சிதம்பரம் பிள்ளை பி.ஏ., பி எல். அவர்களும் ஆவர். அம் மாநாட்டுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பாக நடத்தியவர்கள் சிவத்திரு ஈசான சிவாச்சாரியார் அவர்களும், பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் ஆவர். தமிழகத்திலிருந்து சைவசித்தாந்த சாத்திரத்தை நன்கு கற்ற அறிஞர்கள் ஒவ்வொருவரும் தாம் எடுத்துக் கொண்ட நூலைப்பற்றிக் கேட்பார் மகிழும் வண்ணம் பேசியதோடு எழுதியும் கொடுத்துள்ளார்கள்.

விழா மலர் என்று முன்னதாகவே அச்சிட்டு மாநாட்டிலே வெளியிடப் பெறவில்லை. ஆனல், கழகத்தின் திங்கள் வெளியீடாகிய 'செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 19 பரல் 2ஆவது இதழ்' மட்டும் மெய்கண்ட சாத்திர மாநாட்டு விழா மலராக அச்சிடப்பெற்றது. அதன்வழி மாநாட்டின் செய்திகளை நன்கு அறிந்து இன்புறலாம்.

சைவ சமய இலக்கணமாகிய மெய்கண்ட சாத்திர மாநாடு நடத்தி 20 ஆண்டுகள் கழித்துச் சைவ சமய இலக்கியமாகிய சைவத் திருமுறை மாநாட்டை நடத்தத் திருவருள் வாய்ப்பளித்தது. பன்னிரு சைவத் திருமுறைகள் முழுமையும் கழகம் அழகுற வெளியிட்டுள்ளது. 'பன்னிரு திருமுறைப் 'பெருந்திரட்டு' என்ற பெயரில் நூலொன்றைத் திரட்டி வெளியிட வேண்டுமென்ற

கருத்து ஆட்சியாளர்க்குத் தோன்றியது. எனவே, அவர்தம் விருப்பப்படி கழகப் பெரும் புலவர் ப. இராமநாத பிள்ளை அவர்கள் திருக்கோயில்கள் ஒன்றையும் விடாமல் சிறந்த கருத்தமைந்த பாடல்களையும், வேண்டுகோள் பதிகங்களை முழுமையாகவும் முதல் ஏழு திருமுறைகளிலிருந்து தொகுத்ததோடு மற்ற ஐந்து திருமுறை களிலிருந்தும் சில முழுப் பதிகங்களையும், தனிப் பாடல்களையும் தொகுத்தனர். பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு வெளி யீட்டிற்கு 1008 என்ற எண் அமைந்தது திருவருட் குறிப்பே யாகும். அது மலர் தூவி இறைவழிபாடு செய்வதற்குரிய சிறப் பெண்ணாகும்.

அந் நூல் முகப்பில் அம்மையப்பர், அம்பலவாணர் அம்மை, சமயகுரவர் நால்வர் திருவுருவப் படங்களும் சேர்க்கப் பெற் றிருக்கின்றன.

1961 ஆகஃச்டுத் திங்கள் 20, 21, 22ஆம் நாட்களில் சென்னை இராசாசி மண்டபத்திலே 'பன்னிரு திருமுறைப் பெருந் திரட்டு' வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

இனி 1008ஆவது வெளியீட்டு விழா மலரைப் பற்றிய செய்திகளை அறிவோம்.

முதல் நாள் 'பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு' என்ற நூல் வெளியிடப்பெற்றது. இரண்டாம் நாள் கண்ணையும் கருத் தையும் கவரக்கூடிய பெரும் பொலிவோடு கூடிய '.008 ஆவது வெளியீட்டு விழா மலர்' வெளியிடப்பெற்றது. அதன்கண் கழக வரலாறு ஆங்கிலத்திலும்—தமிழிலும் எழுதப்பெற்றுள்ளது. விழாக்குழு அமைத்துத் திட்டம் வகுத்து எழுத்து மூலமாக வேண் டிக்கொண்டபடி இந்தியத் தலைமை அமைச்சர், குடியரசுத் தலைவர், பிற மாநில ஆளுநர்கள் முதலியோர் வாழ்த்துரைகள் வழங்கி யுள்ளனர். தமிழ்நாட்டு மேதகு ஆளுநர், மாண்புமிகு முத லமைச்சர், கல்வி அமைச்சர் முதலியோர் விழாவிலே பங்கு கொண்டதோடு வாழ்த்துரைகளும் வழங்கினர்.

மேலும் நடுவணரசு அமைச்சர்களில் சிலரும், பிற மாநில அமைச்சர்களில் சிலரும், நீதிபதிகள், பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் முதலியோர்களும் வாழ்த்துரைகள், தமிழிலும் சிலர் ஆங்கிலத்திலும் வழங்கினர். வாழ்த்துரைகள் நாற்பது பக்க அளவில் அமைந்திருக்கின்றன. அறிஞர் பெருமக்கள் கழகம் வேண்டிக்கொண்டபடி குறிப்பிட்ட தலைப்புக்களில் தமிழில் 32 கட்டுரைகளும், ஆங்கிலத்தில் 6 கட்டுரைகளும் எழுதியுள்ளனர். ஒவ்வொரு கட்டுரைத் தலைப்பிலும் அதனை எழுதிய ஆசிரியர் உருவப்படமும், வரலாற்றுக் குறிப்பும் காணப்படும். அப்படி

அமைய வேண்டுமென்பது கழகத்தின் குறிக்கோள் ஆகும். வாழ்த் துரைகள் அனுப்பியவர்களின் உருவப் படங்களும் கூடுமானவரை பெற்று அவற்ருேடு பதிக்கப்பெற்றிருக்கின்றன. மலரின்கண் தனியே கழகப் புத்தகக் கட்டடங்களுக்கு அனைத்திந்திய அச்சிடு வோர் மாநாடுகளிலும், நடுவணரசு விழாக்களிலும் பரிசுகள் அளித்துக் கொடுத்த சான்றிதழ்கள், பரிசுப் பொருள்கள் ஆகியவற் றிற்குப் பட அச்சுக் கட்டைகள் செய்து மலரின்கண் அழகாக அச் சிடப்பெற்றுள்ளன. இங்கிலாந்து எலிசபெத் அரசியும் எடின்பரோ கோமகனும் 19—2—1961இல் சென்னை மாநகர்க்கு வந்திருந்த போது அரசு மாளிகையில் அரசினரால் அளிக்கப்பெற்ற பரிசுப் பொருள்களுடன் வனப்புமிக்க மரப் பெட்டகத்தில் டாக்டர் போப் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் வைக்கப்பெற்றுக் கழகம் வழங்கியது. அப் படம் விழாமலரின்கண் இடம்பெற்றிருக்கிறது.

கழக ஆட்சிக் குழுவிலுள்ள தலைவர்கள், உறுப்பினர்கள், கழகம் தோன்றுவதற்குக் காரணராய் இருந்த அருட்செல்வர் தி. செ. விசுவநாத பிள்ளை அவர்கள் ஆகியோர் உருவப்படங்களும், அதுவரை வெளியிடப்பெற்ற கழக நூல்களின் ஆசிரியர்களுடைய உருவப்படங்களும், சங்க இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் பற்றி நடைபெற்ற மாநாடுகளின் தலைவர்கள், சொற்பொழிவாளர்கள் ஆகியோர் உருவப்படங்களும் இதன்கண் காணப்பெறும்.

கழகம் நடத்தி வரும் மறைமலையடிகள் நூல்நிலையக் கட்டி டத்தின் படம், நூல் நிலையத்தின் உள்ளே உள்ள சிறப்பு அமைப்புக்களின் படங்கள், நூல்நிலையத்திற்கு வந்து பாராட்டுரை வழங்கியோர் உருவப்படங்கள் ஆகியவை மலரின்கண் சேர்த் திருப்பது தனிச் சிறப்பாகும். மேலும் கழகத் தலைமை நிலையத் திலும், கிளை நிலையத்திலும் பணிபுரிந்து வரும் புலவர்கள், எழுத்தர்கள் படங்களும் சேர்க்கப்பெற்றுள்ளன.

இம் மண்ணுலகில் வாழ்ந்து மறைந்தபின் கழகத்தோடு தொடர்புடைய புலவர் பெருமக்கள் ஆவிஉலகத் தொடர்பாளர் (மீடியம்) வழி அனுப்பிவைத்த வாழ்த்துரைகள் திருவுருவப்படங் களுடன் வெளியிடப் பெற்றிருப்பது புதுமை தருவதோர் உண்மைச் செயலுமாகும். அதற்கு 'மரணத்தின் பின் மனிதர்நிலை' என்ற நூல் எழுதிய மறைமலையடிகளாரே முன்னோடியாவார்கள்.

அப்படி வாழ்த்துரை எழுதியுள்ளவர்கள், மறைத்திரு மறை மலையடிகள், தொல்காப்பியம் முதலிய சங்க நூல்களின் பதிப்பாசிரியர் சி. வை. தாமோதரனார், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆகிய நால்வரு மாவர். இம் மலருக்கு வாங்கப்பட்ட விளம்பரங்கள் யாவும் மலரின்

கண் இறுதியில் தனியாகவே அழகுற அச்சிட்டு வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இம் மலரின்வழி பெறும் பயன் :

ஒரு பெரிய கூட்டுப் பங்குப் பதிப்பு நிறுவன விழா மலருக்கு, அரசியல் தலைவர்களும், பல்துறைப் பெருமக்களும், அறிஞர்களும் ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதியுள்ள வாழ்த்துரைகள், கழகத்தின் பணியினை நன்கு புலப்படுத்துவதோடு, எப்படி எழுத வேண்டுமென்ற கருத்தினையும் நடையினையும் உணர்த்துவனவாகும்.

இப்படி ஒரு பதிப்பு நிறுவனம் தமிழ்நாட்டிலே தோன்றிப் புகழ்பெறும் பணியினைச் செய்து வருதலைத் தொகுப்பாகத் தெரிந்து கொள்வதற்கு இத்தகைய மலர்தான் வழிகாட்டுமே அல்லாது வேறு எவ்வகையில் அறிந்துகொள்ள இயலும் என்பது உய்த்துணர் தற்பாலது. இச் செய்திகளனைத்தையும் படச்சுருளில் அமைத்து வைப்பினும், நூலுருவில் அமைத்து நூலகங்களில் வைத்து என்றும் பயன்படுமாறுபோல் இருக்குமா என்பது எண்ணற்பாலது.

திருவள்ளுவர் திருநாள் விழா மலர் :

கழக ஆட்சியாளர் செந்தமிழ்ச் செல்வி இதழில் "திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி" என்ற தலைப்பில் தொடர்பாகக் கருத்துரைகள் எழுதி வந்தனர்.

1935இல் கழக ஆட்சியாளரும் அவர்தம் நெருங்கிய நண்பர் காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை அவர்களும் இணைந்து திருவள்ளுவர் திருநாட் கழகச் செயற்குழுவினை அமைத்தனர். அக்குழுவின் அமைச்சராகத் திருவாளர் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்களும், துணை அமைச்சராகக் காழி சிவ கண்ணுசாமி பிள்ளை அவர்களும், பொருளாளராக அப்போது கழகக்கிளை முகவராக இருந்த யானும் மற்றும் பன்னிருவர் உறுப்பினர்களாகவும், இருந்து பணிபுரிந்தோம்.

முதலாண்டு விழா 1935இல் சென்னையில் மறைத்திரு மறைமலையடிகளார் தலைமையிலும், இரண்டாம் ஆண்டு விழா 1936இல் டாக்டர் உ. வே சாமிநாதையர் தலைமையிலும், மூன்றும் ஆண்டு விழா பாகனேரியில் கோவை சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் தலைமையிலும் நடைபெற்றன. முதலாண்டு விழா மலர் மிகவும் அழகாகப் பதிக்கப்பெற்றுக் குறைந்த விலை 9 அணு விலை வைத்து விற்கப்பெற்றது.

1968ஆம் ஆண்டில் சென்னையில் கழகம் நடத்திய திருவள்ளுவர் திருநாள் விழா மலரைப் பற்றிய குறிப்புக்கள் பின்னர் எழுதப்படும்.

வ. சு.

தமிழெழுத்து மாற்றம் தன்மானத் தந்தையார் கொள்கையா?

[ஞா. தேவநேயன்]

ஆரியச் சூழ்ச்சியால் அடிமைப்பட்டு ஆயிரக் கணக்கான ஆண்டுகள் அலமந்துழலும், அருமொழித் தமிழரை விடுவித்து முன்னேற்ற முயன்ற முனைவர் மூவருள் இறுதியரான, பெரியாரின் நூற்றாண்டு விழாவென்று விளம்பிய மட்டில், ஏற்கெனவே இருந்த இடம் தெரியாமல் இருந்தவரும், பெரியாரொடு ஒருமுறையேனும் பேசியறியாதவரும், தன்மான வுணர்வும் தமிழ்ப் புலமையும் தக்கவா றில்லாதவரும், தன்மானப் போர்ப் படைத்தலைவர் போன்றும், தன்னேரில்லாத் தமிழதிகாரி போன்றும், நடித்துக்கொண்டு, தமிழ் உலகப் பொதுமொழியாகவும் தமிழன் ஒன்றிய நாட்டினங்களின் தலைவனாகவும் ஒரே வழி "விடுதலை" யெழுத்தை மேற்கொள்வதே என்று மேடைகளிற் பிதற்றியும், ஓரளவு அதிகாரம் பெற்றுக் குழுக்கள் அமைத்தும் கூட்டங்கள் கூட்டியும், தமிழ்ப் பகைவரும் தமிழறியாத பெருமாளரும் கற்றுக்குட்டிகளுமான தகுதியில்லா மக்களின் கருத்தைத் துணைக் கொண்டும், தம்வயப்பட்ட ஏடுகளி லெல்லாம் தமிழெழுத்தை மாற்றி, உலகில் இதுவரை எவரும் நிலை நாட்டாத தொன்றை நிலைநாட்டி விட்டதாகக் கொட்ட மடித்துத் திரிவாராயினர்.

அரச கோபாலாச்சாரியார் 1937இல் தமிழ்நாட்டில் கட்டாய இந்திக் கல்வியைப் புகுத்தியதிலிருந்து, நான் இந்தியெதிர்ப்புப் பற்றிப் பெரியாருடன் தொடர்பு கொண்டு இறுதிவரை நெருங்கிப் பழகினேன். அக் காலமெல்லாம், தமிழர் "விடுதலை" யெழுத்தை மேற்கொள்ள வேண்டுமென்று, பெரியார் ஒரு கூட்டத்திலேனுஞ் சொன்னதுமில்லை; ஓர் இதழிலேனும் எழுதினதுமில்லை. எனக்கு முன்பே பெரியாரை யடுத்து அவர் தன்மானக் கொள்கையைக் கடைப்பிடித்து அவருக்கு வலக்கைபோல் துணையாயிருந்து வந்த பர். (Dr.) கி. ஆ. பெ. விசுவநாதம் என்னும் உலக தம்பியாரும், இதற்குச் சான்று பகர்வர்.

நான் திருச்சியிற் பணியாற்றிய காலத்தில், 1938ஆம் ஆண்டில் பெரியார் ஈரோட்டிலிருந்து எனக் கெழுதியிருந்த 5 பக்கக் கடிதம் மரபெழுத்திலேயே எழுதப்பட்டிருந்தது. நான் சேலம் நகராட்சிக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவனாயிருந்த காலத்தில், 1947ஆம் ஆண்டில், பேரா. தி. வை. சொக்கப்பனாரும், பேரா. பேரிய

சாமியும் எனக்குச் சிறப்புச் செய்ய ஏற்படுத்தியிருந்த கூட்டத் திற்குத் தலைமை தாங்கிய பெரியார், தம் கையினால் எனக்கு வழங்கிய வெள்ளிப் பட்டயத்திற் பொறிக்கப்பட்டுள்ள பாராட்டு வாசகம் மரபெழுத்திலேயே உள்ளது.

நான் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேலை நீங்கிக் காட்டுப் பாடி விரிவிலிருந்தபோது, நான் வருமானமின்றியிருந்த நிலைமை யறிந்து பெரியார் தாமே என் உறையுள் தேடிவந்து இருநூறு உருபா வழங்கினார். அன்றும், தமிழெழுத்து மாற்றம் பற்றி என்னிடம் ஒன்றும் சொன்னதில்லை. பெரியாருக்கு என்றும் தன்மான இயக்கத்திலன்றித் தமிழ் வளர்ச்சியில் ஈடுபாடு இருந்ததே யில்லை. நான், ஒருகால், அரைக்கால் உருபாக் காசில் இந்தியெழுத்தும் தெலுங்கெழுத்தும் இருந்தபோது தமிழெழுத் தில்லாமை பற்றிக் கிளர்ச்சி செய்யவேண்டுமென்று பெரியாருக் கெழுதினபோது, அவர், "நான் உங்களைப் போற் பண்டித னல்லேன். பொதுமக்களிடம் தொண்டு செய்து அவர் மூடப் பழக்க வழக்கங்களைப் போக்குபவன், நீங்களும் உங்களைப் போன்ற பண்டிதருமே சேர்ந்து அக் கிளர்ச்சி செய்யுங்கள்" என்று மறு மொழி விடுத்துவிட்டார். இதிலிருந்து, தமிழ் மொழியோ எழுத்தோ பற்றி அவருக்குக் கடுகளவும் கவலையிருந்ததில்லை யென்பது வெட்ட வெளிச்சமாகின்றது. அவர் இந்தியை யெதிர்த்ததெல்லாம், பேராயக்கட்சியை யெதிர்ப்பதும் ஆரியச் சூழ்ச்சியைக் கண்டிப்பதும் தமிழ திரவிடர் நல்வாழ்விற்கு வழி வகுப்பதும் குறிக்கோளாகக் கொண்டதே யன்றி வேறன்று. இதை அவர் பல பொதுக் கூட்டங் களிலும் வெளியிட்டுச் சொல்லியிருக்கின்றார். 'விடுதலை' 'குடியரசு' ஆகிய இதழ்களில் சில எழுத்து வடிவங்களை அவர் மாற்றியது, முற்றும் சிக்கனம் பற்றியதே. பெரியார் சிக்கன வாழ்வு நாடறிந்தது; உலகறிந்தது.

தமிழெழுத்து மாற்றம் என்பது தேவையில்லாத ஒரு சிறு செயல். பெரியார் செயற்கரிய பெருஞ்செயல்களைச் செய்தவர். அவர் மீது ஒரு சிறு புன் செயலையேற்றுவது, அவர் பெயருக்கு இழுக்கே யாகும்.

பெரியாரைப் பின்பற்றல்

பெரியார் செய்த பெருஞ்செயல்களும் கொண்டிருந்த அருங் குணங்களும் வருமாறு :

1. பிறவிக் குலவொழிப்பு

தமிழ திரவிடர் விடுதலையடைந்து முன்னேற முடியாவாறு, இந்தியக் குலங்கள் தொழில்பற்றாது மொழியும் பெற்றோர் அலில்து

முன்னேரும் பற்றியே ஆரியச் சூழ்ச்சியால் வகுக்கப்பட்டுள்ளன. கன்னடியரான நாய்க்கர் தமிழ வெள்ளாளப் பெண்ணை மணந்தது இருமடிப் பிறவிக்குல வொழிப்பாகும்.

2. தீண்டாமை விலக்கு

'வைக்கோம் வீரர்' என்னும் விருதுப் பெயரே இதை விளக்கப் போதுமானது.

3. தன்மானங் காத்தல்

தமிழன் தன்னைச் 'சூத்திரன்' என்று சொல்லவும் பிராமணன் சொல்லவிடவும் பிராமணனைச் 'சாமி' என்று விளிக்கவும், மரக்கறியூண் வெள்ளாளன் வீட்டிலும் உண்ணாத பிராமணன் உண்டிச் சாலையில் உண்ணவும், கூடாதென்று தடுத்தது தன்மானங் காத்தலாகும்.

எனக்குத் தெரிந்தவரை பிராமணர் வீட்டிலும் உண்டிச் சாலையிலும் எந் நிலைமையிலும் உண்ணாமையைக் கடைப்பிடித்து வரும் உண்மைத் தன்மானியர், தகடூர்த் (தர்மபுரித்) தமிழ மருத்துவர் அ. செல்லையா ஒருவரே.

4. மடமை யகற்றல்

நாளும் புள்ளும் பற்றிய மூடநம்பிக்கை விடுகை, வீண்சடங்கொழிப்பு, திருமணச் சீர்திருத்தம், உருவ வழிபாடு—சிறப்பாக யானைமுகப் பிள்ளையார் வணக்க விலக்கு, தொன்மக் (புராணக்) கதைகளை நம்பாமை, இழிவான கட்டுக் கதை பற்றிய விளக்கணிப் (தீபாவளிப்) பண்டிகையைக் கொண்டாடாமை முதலியன பற்றிய விளக்கச் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் மடமை யகற்றலாகும்.

5. அஞ்சாத் தொண்டு

சிறைத் தண்டனை யடைந்தும் கட்டாய இந்தியை யெதிர்த்ததும், கல்லெறியுஞ் சாணியெறியும் பட்டும் தொண்டுவிடாமையும் பெருவாரியான பல்வேறு வகுப்பார் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமையும், அஞ்சாத் தொண்டாம்.

6. கடைப்பிடி

சிறுநீர் நோய்க்கு அறுவை மருத்துவம் செய்துகொண்டும், நாள்தொறும் இடர்ப்பட்டும், கழிபெரு மூப்புத் தளர்ச்சியுற்றும், இடைவிடாது இறுதிவரை தொண்டிற் படிந்தது கடைப்பிடியாம்.

7. தன்னலமின்மை

தனக்கென்று பொருளீட்டாது பொதுநலத் தொண்டிற்கென்று தொகுத்தது தன்னலமின்மை.

8. பண்புடைமை

மறைமலையடிகள் போலும் அறிஞரை மதித்ததும், பொறுப்பு வாய்ந்த புலவர் ஒருவர் 'நாய்க்கர்' என்னும் குலப்பெயரை இரு பிறப்பி (hybrid) யாக்கித் தம்மைப் பழித்தபோது திருப்பிப் பழியாது நாகரிகமாய்க் கண்டித்ததும், சங்கராச்சாரியர் வேண்டுகோட் கிணங்கி ஒரு கல்வி நிலையத்தைத் திறந்து வைத்ததும், இன்னோ ரன்ன பிறவும், பெரியாரின் பண்புடைமையைப் புலப்படுத்தும்.

9. உண்மை புடைமை

பெரியார் என்றேனும் உண்மையை மறுத்ததாகவும் இல்லாததைச் சொன்னதாகவும், ஒரு குறிப்புமில்லை.

10. பகுத்தறிவூட்டல்

கல்வியமைச்சரும் பெரும் பேராசிரியரும் கல்வித்துறை மியக் குநரும் பல்கலைக்கழகத் துணைவேந்தரும், நோபெல் பரிசு பெற் றோரும், உலக ஆராய்ச்சி மன்றத் தலைவரும் போலும், உயர் கல்வி யாளர்க்கும் இல்லாத பகுத்தறிவை, எழுதப் படிக்கத்தெரியாத எளிய பொதுமகனுக் கூட்டியது, செயற்கரிய பெருஞ்செயலே.

இங்ஙனம் பெரியார் இயலும் செயலும் பல்வகைப்பட்டிருக்க வும், அவற்றுள் ஒன்றேனும் பின்பற்றாது, அவர் கருதாத எழுத்து மாற்றத்தையே மேற்கொள்வார், சாற்றை விட்டுச் சக்கையே பற்றும் பன்றை போல்வார். பெரியாரைப் பின்பற்றல் சிறியார்க்கு எளிதன்று.

பல்லாயிரவாண்டு பண்டாடு பழநடையாக வழங்கிவரும் தமிழ் மரபெழுத்தை, மறைமலையடிகளும் மாபெரும் புலவர் தலைவர் உ. வே. சாமிநாதையரும் போலும் தமிழதிகாரிகள் விருப்பத்திற்கு மாறாகவும், உலகெங்குமுள்ள தமிழ் நூலகமுடையார்க்கும் நூல் வெளியீட்டாளர்க்கும் பேரிழப்புண்டாகுமாறும், தமிழுக்கு ஒருவகை யிலும் நலந்தரா முறையிலும், மாற்றுவதை விளம்பர விருப்பினர் உடனே விட்டொழிவாராக.

குறிப்பு: 18—4—'70இல் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் பல்லாவரம் மறைமலையடிகள் கலைமன்றத்தைப் பார்த்து வாழ்த்துரை எழுதியதில் 'மறைமலை' 'கலைமன்றம்' என்ற இரு சொற்களிலும் 'லை' என்று மாற்றி எழுதவில்லை. செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 26இல் தமிழ் எழுத்து மாற்றத்தைக் கண்டித்துத் திரு. ஞா. தேவநேயப்பாவாணரும், திரு. கா. அப்பாத்துரையாரும் எழுதிய கட்டுரைகளைப் பார்க்க.

தெ. பொ. மீ.யின் திரிபாராய்ச்சி

[ஞா. தேவநேயன்]

(முன் இதழ் உ௪௯ஆம் பக்கத் தொடர்ச்சி)

பர். தெ. பொ. மீ. யின் 'தமிழிலக்கணத்தில் அயன்மொழி யமைப்புகள்' (Foreign Models in Tamil Grammar) என்னும் தமிழிலக்கண ஆராய்ச்சி நூல், 9 அதிகாரங்களும் 4 பின்னுரைகளு மாக 13 கட்டுரைகளைக் கொண்டது. அவற்றுள் முதலது, 'தமிழிலக்கண வரலாறு' (A History of Tamil Grammar) என்னுந் தலைப்பையுடையது.

தமிழிலக்கண வரலாறு

இதில், ஆசிரியர் தம் ஆராய்ச்சி நூல் முழுமைக்கும் முன்னுரையாக, தொல்காப்பியம் முதல் இவ்விருபதாம் நூற்றாண்டில் மாணவர்க்கு எழுதப்பட்ட உரைநடை யிலக்கணச் சுவடிகள் வரை, இற்றைத் தமிழிலக்கண நூல்களையெல்லாம் பெரும்பாலுங் கால முறைப்படி எடுத்துக்கூறி, அவற்றின் ஆசிரியர், உரையாசிரியர், புரவலர், மரபுச்சார்பு, இலக்கணப் பிரிவு. மொழிநடை முதலிய குறிப்புக்களையும் சுருக்கமாகக் குறித்திருக்கின்றார்.

தமிழிலக்கணத்தை ஆரியச் சார்பினதாகக் காட்டுவதே பர். தெ. பொ. மீ. யின் அடிப்படைக் குறிக்கோளாதலால், தொல்காப்பிய மரபு நன்னூல் மரபு சமற்கிருத மரபு எனத் தமிழிலக்கண நூல்களை மூவேறு மரபினவாக வகுத்துக் கூறுவதை முதன்மையாகக் கொண் டிருக்கின்றார். இங்ஙனம் வேறுபட வகுத்திருப்பினும், முதலிரண்டும் அடிப்படையில் அல்லது ஒரு மருங்கு சமற்கிருதச் சார்பென்றும், இறுதியது முற்றும் சமற்கிருதச் சார்பென்றும், கொள்வதே அவர் கருத்து. இது தொல்காப்பியம் பாணினீய வழியதென்று பின்னர்க் கூறுவதால் தெரியவரும்.

தமிழிலக்கணம் தனிப்பட்டதென்றும் இன்றும் ஒப்புயர்வற்ற தென்றும் அறிதற்கு, அதன் பொருளதிகாரமே போதிய சான்றாம். சமற்கிருதத்திற் பொருளிலக்கண மின்மையால், சொல்லதிகாரமே அதற்குச் சிறந்ததாகக் கொள்ளப்படும். தமிழிலோ, பொரு ளிலக்கணமே இலக்கணமென்றும், அதை யறிதற்குக் கருவியே எழுத்துஞ் சொல்லுமென்றும் கொள்ளப்படும்.

"அரசன், இனி நாடு நாடாயிற்றாகலின் நூல் வல்லாரைக் கொணர்கவென்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமுஞ்

சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொரு ளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேமென்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, 'என்னை? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின், இவை பெற்றும் பெற்றிலேம்' எனச் சொல்லா நிற்ப" என்று இறையனாரகப் பொருளுரை உரைத்தல் காண்க.

இங்ஙனமிருந்தும், இற்றை அகப்பொருள் புறப்பொருள் இலக்கண விலக்கியமெல்லாங் கற்றும், தமிழின் பெருமையையும் அதன் இலக்கண வுயர்வையும் இற்றைத் தமிழ்ப் பேராசிரியர் பலரும் உணராதிருப்பதற்கு, அவர் முன்னோர் மூவாயிர வாட்டை யாரிய வடிமைத்தனத்தில் உழன்றதனாற் பகுத்தறி விழந்தமையே காரணமா யிருத்தல்வேண்டும்.

இனி, ஒரு தனிப்பட்டவர் அல்லது சாரார் உயர்நிலை யடைந் திருப்பின், அந்நிலை தொன்று தொட்டதென்றே துணிய வியலாது. களவு செய்தும் பிறர்பொருள் பறித்தும் அவர் அந்நிலை யடைந் திருக்கலாம். அதை வரலாறு கொண்டு அறிதல்வேண்டும்.

ஆங்கிலர் 1765இல் நீராவிப் பொறிபுனையுமுன் இலக்கியத்தில் தமிழரினும் தாழ்ந்தன்றி உயர்ந்திருந்ததில்லை. அங்ஙனமே, இந்திய ஆரியரும் தமிழரொடு தொடர்பு கொள்ளுமுன், சிறுதெய்வ வழுத்துத் திரட்டாகிய வேதந்தவிரத் தமிழர்போல் இலக்கிய விலக்கணம் உடையராயிருந்ததில்லை. இன்றோ, "குப்பையுயர்ந்தது, கோபுரந் தாழ்ந்தது" என்னும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும், வேத ஆரியரின் முன்னோர் மொழியும் ஒருவகைத் தமிழ்த் திரிபே என்பது பின்னர் விளக்கப்படும்.

பர். தெ. பொ. மீ. தமிழாரிய மொழிகளின் தோற்றத்தையும் நெட்டிடைப்பட்ட முன்மை பின்மையையும் தென்மை வடமை யையும் ஆராய்ந்தறியாமையால், அவ் விருமொழிகளும் இற்றை நிலையிலேயே தொன்றும் இருந்ததாகக் கொண்டு, தொல்காப்பியமே தமிழிலக்கண முதனூலென்றும், அது பாணினீயத்திற்குப் பிற்பட்ட தென்றும், கிறித்தவ வூழித் தொடக்கக் காலத்தினதென்றும், அதிற் கூறப்பட்டுள்ள ஆற்றுப்படை யிலக்கணம் பத்துப் பாட்டு ஆற்றுப் படைகளையே மூல இலக்கியமாகக் கொண்டதனால் கி. பி. 7ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிற்காலத் தொல்காப்பியத்தைச் சேர்ந்ததென்றும், பன்னிருபடல ஆசிரியர் பன்னிருவரின் ஆசிரியர் ஒருவரே அகத்தியரென்றும், அவர் உடம்படு மெய்பற்றி முற்காலத் தொல்காப்பியரொடு கருத்து வேறுபடுகிறாரென்றும், தமக்குத் தோன்றியவாறெல்லாம் பலபடக் கூறியுள்ளார்.

தமிழ் உலக முதல் உயர்தனிச் செம்மொழியாதலால், அதன் முதற்கால இலக்கணங்களெல்லாம் வரலாற்றிற் கெட்டாத தொன் முது பழைமையன; எண்ணிறந்தன; பெயருந் தெரியாவாறு இறந்துபட்டன.

தொல்காப்பியச் சிறப்புப்பாயிர ஆசிரியரான பனம்பாரனர்,

"செந்தமிழ் வழக்கொடு சிவணிய நிலத்து
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்"

என்று, தொல்காப்பிய முதனூல்கள் பலவெனப் பொதுப்படக் குறித்தார்.

தொல்காப்பிய முதல் நூற்பாவே, "எழுத்தெனப் படுப", "மூப்பஃதென்ப" என்று முன்னூலையும் முன்னூலாசிரியரின் பன்மையையும் குறிக்கின்றது. ஆதலால், தொல்காப்பியம் சார்பிற் சார்பான பண்டைப் பன்னூல் தொகுப்பேயன்றிப் புதுப்படத் தோன்றிய தனிநூலன்று.

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனர் புலவர்" (தொல். செய். 78)

"ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே." (செய். 104)

"மருட்பா பரிபாட் டெனவிரு வகையும்
மருவிய கலவைப் பாவென மருவும்."

"வண்ணந் தாமே நாலைந் தென்ப" (செய். 210)

"வனப்பியல் தானே வகுக்குங் காலை
அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபு புலனே இழைபென
எண்வகை யாமென் றியம்பினர் புலவர்."

"பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டி னியல பண்ணத்தி யியல்பே." (செய். 180)

இங்ஙனம் பல்வேறு வகைப்பட்ட யாப்பியற் கூறுகட்கும் எடுத்துக் காட்டிலக்கியம், தொல்காப்பியத்திற்கு முந்தியதே யன்றிப் பிந்தியதன் றென்பது வெளிப்படை.

இயைபு என்னும் வனப்பிற்குச் சிலப்பதிகாரமும் மணிமேகலையுமே மூல இலக்கியம் என்பதற்கும் இடமில்லை. அவ்விரு பாவியங்களும் னகர மெய் யொன்றையே பாட்டிறுதியாகக் கொண்டுள்ளன.

"ஞகார முதலா னகார வீற்றுப்
புள்ளி யிறுதி இயைபெனப் படுமே." (தொல். செய். 238)

என்பது இயைபிலக்கண மாதலால், ஞ், ண், ந், ம், ன், என்னும் ஐம்மெல்லின வீற்றிலும் இற்ற பாட்டுக்களைக் கொண்ட ஐவகை இயைபு வனப்பிற்கும் மூல விலக்கியம், தொல்காப்பியத்திற்கு முந்தியதாகவே இருத்தல் வேண்டும். அதுபோன்றே,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்"
(தொல். புறத். 36)

என்னும் ஆற்றுப்படை யிலக்கணத்திற்கும் மூல இலக்கியம், தொல்காப்பியத்திற்கு முந்தியதே யென்பது தானே பெறப்படும்.

பாணினிக்கு முந்திய கி. மு. 6ஆம் நூற்றாண்டுத் தொல்காப்பியரும், கி. பி. 7ஆம் நூற்றாண்டுபோ லியற்றப்பட்ட பன்னிரு படல ஆசிரியருள் ஒருவரான தொல்காப்பியரும், ஆக இருவர் தொல்காப்பியர் என்று கொள்ள இடமுண்டு. ஆயின் இரு தொல்காப்பியம் இருந்ததில்லை. முற்காலத் தொல்காப்பியர் எழுத்து சொல் பொருள் என்னும் முக்கூறும் பற்றிய இயற்றமிழிலக்கணம் முழுமையும் தொகுத்தவர். அந்நூலே தொல்காப்பியம் என அன்றிருந் தின்றுவரை வழங்கி வருகின்றது. பிற்காலத் தொல்காப்பியர், பர். தெ. பொ. மீ. கூறுகின்றவாறே, பன்னிருபடலத்துள் முதலதாகிய வெட்சிப் படலத்தை இயற்றியவர். ஆற்றுப்படையிலக்கணம் பொருளதிகாரத்தில் பாடாண்திணைக் குரியதே யன்றி வெட்சித் திணைக்குரியதன்று. இனி, வெட்சிப்படலம் இயற்றியவரே பாடாண்படலமும் இயற்றியிருக்கவும் முடியாது; ஒருகால் இயற்றியிருப்பினும் அதைப் புலவர் தொல்காப்பியத்தொடு மயக்கியிருக்கவும் முடியாது. இறையனாரகப் பொருளொடு நம்பியகப் பொருளை மயக்குவாரில்லை. அதுபோன்றே இதுவும்.

"இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்பலின்" (நன். 141), "இலக்கிய மின்றி யிலக்கண மின்றே" (பேரகத்) என்பதனால், இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்குமுன் எத்துணையோ இலக்கிய வனப்புகள் இருந்திருத்தல் வேண்டும்.

இனி, தொல்காப்பியத்தில் சில ஆரியக் கருத்துக்களும் குறிப்புக்களுமிருப்பதால், தனித்தமிழ் நூல்களெல்லாம் அதற்கு முற்பட்டே யிருந்து இயற்கையாலும் செயற்கையாலும் அழியுண் டிருத்தல் வேண்டும்.

ஆயின், பர். தெ. பொ. மீ. தொல்காப்பியத்தையே தமிழ் முதனூலாகவும், ஆற்றுப்படை யிலக்கணத்தைப் பத்துப் பாட் டிற்குப் பிற்பட்டதாகவும், தொல்காப்பியரை அகத்தியருக்கு முந்திய வராகவும், காட்டியிருப்பதால், அவர் காலத்திற்குமுன் மூவேந்த ராட்சியும் புலவர் பாணர் கூத்தர் பொருநர் விறலியர் முதலியோர் வாழ்க்கையும், தமிழிலக்கிய விலக்கணமும் தமிழ நாகரிகமும் இருந்ததில்லையென்றே, ஆராய்ச்சியில்லார் கருதவைத்துள்ளார். இம் மயக்கை அறவே மறுத்தற்குப் "பாட்டுரை நூலே" என்ற தொல்காப்பிய நூற்பா ஒன்றே போதியதாகும்.

தொல்காப்பியர் போன்றே அகத்தியரும் இருவராவர். முதல கத்தியர் வான்மீகியார் காலத்தவர். அவரே முதன்முதலாகத் தென்னாடு வந்த ஆரியர். அதனால், பனிமலை யெழுச்சியும் குமரி மலைமுழுக்கும் அவர் வரவொடு தொடர்புபடுத்திக் கதை கட்டப் பட்டது. அவர் முத்தமிழுங் கற்றுத் தம் பெயரில் ஒரு முத்தமி ழிலக்கண நூலியற்றினா ரென்பது, வீரமாமுனிவர் செய்தியை நோக்கின் ஐயுறவிற் கிடந்தருவதன்று. அம் முத்தமிழகத்தியம் இறந்துபட்டது.

"என்றுமுள தென்றமிழி யம்பியிசை கொண்டான்"
(ஆரணிய. அகத். 47)

என்று கம்பரும் பாடுதல் காண்க.

இரண்டாவது அகத்தியர், கி. பி. 7ஆம் நூற்றாண்டுப் பன்னிருபடல ஆசிரியன்மாரின் ஆசிரியரா யிருந்திருக்கலாம். அவரியற்றிய இயற்றமிழிலக்கண நூலாகிய அகத்தியத்தினின்றே, உரையாசிரியன்மார் சில நூற்பாக்களை எடுத்தாண்டுள்ளனர் போலும்!

பிற்காலப் பேராசிரியத்திரட்டு என்பது ஆராய்ச்சிக்குரிய தன்று.

ஈருயிரொலிகள் இடையீடின்றி யொலிக்கும்போது, இடை யில் யகர மெய் அல்லது வகர மெய் தோன்றுவது எல்லா மொழி கட்கும் பொதுவியல்பாம். அங்ஙனம் தோன்றும் மெய் உடம்படு மெய் எனப்படும். அதை எல்லா மொழிகளும் எழுத்திற் குறிப்ப தில்லை.

எ - டு : மணி + ஓசை = மணியோசை } உடம்படுமெய் குறிக்
பல + ஆறு = பலவாறு } கப்படும் தமிழ்

my + object = my object } உடம்படு மெய் குறிக்
you + are = you are } கப்படா ஆங்கிலம்

தமிழிலும் உடம்படுமெய் முதற்கால எழுத்திற் குறிக்கப்படா திருந்திருக்கலாம். ஒலியறிவும் மெய்ப்பொருளறிவும் மிக்க பிற் காலத்தில், அது குறிக்கப்பட்டது.

"எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்"

என்பது, உடம்படுமெய் பற்றிய தொல்காப்பிய நூற்பா. (புணரியல் 33)

இதற்கு நச்சினார்க்கினியர் உரை வருமாறு :

"நிலைமொழியும் வருமொழியுமாய்ப் புணரும் எவ்வகை மொழிக்கும், உயிர் முதன்மொழி வருமிடத்து, உடம்படு மெய்யினது வடிவை உயிரீறு கோடலை நீக்கார் கொள்வார் ஆசிரியர்.

"அவை யகரமும் வகரமும் என்பது முதனூல் பற்றிக்கோடும்;

'உடம்படு மெய்யே யகார வகாரம்
உயிர்முதன் மொழிவரூஉங் காலை யான.'

எனவும்,

'இறுதியு முதலும் உயிர்நிலை வரினே
உறுமென மொழிப உடம்படு மெய்யே.'

எனவும் கூறினாராகலின்."

முதலகத்தியர் பாரதக் காலத்திற்கு முந்திய இராமயணக் காலத்தவராதலால், கி. மு. 12ஆம் நூற்றாண்டினராயிருந்திருக் கலாம்; இரண்டாம் அகத்தியர் கி. பி. 7 ஆம் நூற்றாண்டினரா யிருந்திருக்கலாம்; என்பது முன்னர்க் கூறப்பட்டது. ஆகவே, கி. மு. 6 ஆம் நூற்றாண்டினரான முதல் தொல்காப்பியர் அவ்விரு வர்க்கும் இடைப்பட்டவராவார்.

தமிழின் தொன்மை தென்மை முன்மை முதலிய தன்மைகள் அதன் தாய்மையையும் தலைமையையுங் காட்டுவதால், அவற்றை

மறைத்தற்பொருட்டு, பர். தெ. பொ. மீ. முதலகத்தியரைத் தமிழொடு தொடர்புபடுத்தாது விட்டுவிட்டு, தொல்காப்பிய உடம்படுமெய்ந் நூற்பாவுரையில் நச்சினார்க்கினியர் முதனூல் நூற்பாக்களாக எடுத்துக்காட்டிய மேற்கோள் இரண்டையும், ஓர் அகத்தியருடையனவென்று சான்றில்லாதுகொண்டு, தொல்காப்பியர் காலத்தில் வழக்கூன்றாத உடம்படுமெய்யைத் தம்காலத்தில் வழக்கூன்றியதாகக் கூறும் அகத்தியர் தொல்காப்பியர் காலத்திற்கும் பிற்பட்டவர் என்று துணிந்து கூறியுள்ளார்.

குமரிநாட்டு முதற்காலத்தமிழில் உடம்படுமெய் எழுத்துமொழியிற் குறிக்கப்படாதிருந்திருக்கலாமேனும், தலைக்கழகமும் இடைக்கழகமுந் தாண்டிவந்த தொல்காப்பியர்காலத்தில் அது வழக்கூன்றாதிருந்த தென்பது பொருந்தாது.

மேலும், "உடம்படுமெய்யின் உருவுகொளல் வரையார்" என்னும் தொல்காப்பியர் கூற்று, அக்காலத்திற் புதிதாகத் தமிழ் கற்ற ஆரியப் புலவர் சிலரின் தவற்றைக் கண்டித்ததாகவும் இருக்கலாம்.

உடம்படுமெய் கொளல்வரையார் என்று கூறாது, "உடம்படுமெய்யின் உருவுகொளல் வரையார்" என்றுகூறியது, உடம்படுமெய் எழுத்துமொழியிற் குறிக்கப்படாவிடினும், ஒலிப்புமொழியில் இயல்பாக இருக்கவேயிருக்கின்றது என்னும் உண்மையை நுண்ணிதின் உணர்த்துதல் காண்க.

நச்சினார்க்கினியர், உடம்படுமெய்ந் நூற்பாவுரையில் தாம் எடுத்துக்காட்டிய மேற்கோட்கு ஆசிரியர் பெயர் அல்லது நூற்பெயர் குறியாமை மட்டுமன்றி, இருவேறு முதனூலினின்று எடுத்துக்காட்டியிருப்பதும், பர். தெ. பொ. மீ. கூற்றைப் பொருளிலதாக்கும்.

"முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப் புலந்தொகுத்தோனே போக்கறு பனுவல்" என்னும் சிறப்புப்பாயிரமும், "என்ப", "என்மனார் புலவர்," "நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே," "எனமொழிப," "உணருமோரே" "வரையார்," "என்றிசினோரே" என்றெல்லாம் ஆசிரியர் நெடுகலுங் கூறிச்செல்லும் பெருவழக்கும், தொல்காப்பிய முதனூல்களின் பன்மையை மட்டுமன்றி, அவற்றுட் பலவற்றின் பெயர் அறியப்படாது போனமையையும் குறிப்பாய்த் தெரிவிக்கும்.

இனி,

"வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும்
நினையுங்காலை அவ்வகை வரையார்" (தொல். உயிர். 62)
கொடிமுன் வரினே ஐ அவண் நிற்பக்
கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி." (டி டி 83)

என்னும் நூற்பாக்களை நோக்கின், "வரையார்" என்பது முற்காலநிலைமையுணர்த்தும் ஒரு சிறப்புக் குறிப்புச் சொல்லன்றென்பதும் தோன்றும். அதனால், நச்சினார்க்கினியர், "நீக்கார் கொள்வர்" என்றே பொருள்கூறியமைந்தார்.

தொல்காப்பியத்திற்கு முந்திய மூலநூல்களெல்லாம் உடம்படுமெய்யைத் திட்டவட்டமாகக் கூறியிருப்பதால், தொல்காப்பியமும் அத்தகையதேயெனக் கொள்வதே தக்கதாம். கால் மாத்திரையொலிக்கும் ககரக் குறுக்கத்தையும் மகரக்குறுக்கத்தையும் நுண்ணிதாயுணர்ந்த முன்னைத் தமிழறிஞர், உடம்படுமெய் கண்டறிந்தாரென்பது இம்மியும் வியத்தற்குரியதன்று.

சேனாவரையர், பெருந்தேவனார் முதலிய உரையாசிரியரும், புத்தமித்திரன், சுப்பிரமணிய தீட்சிதர், சுவாமிநாத தேசிகர், வையாபுரிப்பிள்ளை, பர். தெ. பொ. மீ. முதலிய நூலாசிரியரும், கொண்ட சமற்கிருத மயக்கமும் தமிழிகழ்வும் அடுத்த கட்டுரை மறுப்புக்களில் தெளிவாக விளக்கப்பெறும்.

முந்திய இதழ்க் கட்டுரைப் பிழைதிருத்தம்

பக்கம்	பிழை	திருத்தம்
கூ0க	ஆரியக் கண்ணனை	ஆரியர் கண்ணனை
,,	பகவத் கீதை	பகவற் கீதை

தமிழ்மொழியமைப்பு விளக்க வகுப்பு ஒத்திவைப்பு

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு வருகின்ற சனுவரிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதனாலும், மேழவிடையாகிய 'மே' மாதம் கடுங்கதிர் கனலும் முதுவேனிலாதலாலும், தமிழ்மொழியமைப்பு விளக்க வகுப்பு வருகின்ற நளிசிலையாகிய திசம்பர் மாதத்திற்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

ஞா. தேவநேயன்.

அந்த உணர்வு எங்கே?-2

[புலவர் இரா. இளங்குமரன்]

"வாழ்க ; நெடிது வாழ்க ; பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு வாழ்க ; ஆல்போல் படர்ந்து அரசுபோல் துளிர்த்து வாழ்க ; நூற்றிதழ்த் தாமரை போல வாழ்க ; மழைத்துளியினும் மணற்பெருக்கினும் மல்கி வாழ்க" என்று பற்பலவாறாக வாழ்த்து உரைப்பதைக் கேட்டுள்ளோம்.

வாழ்த்துரை ஒருவரை வாழவைக்குமா ? வாழவைக்கும் என்பது நம்பிக்கை. அதனால்தான் மணவாழ்த்து முதல் எத் துணையோ வாழ்த்துக்கள் வாழ்வில் இடம்பெற்றுள்ளன. "ஆயிரம் திட்டு ஆனையையும் சாய்க்கும்" என்றால், "ஆயிரம் வாழ்த்து, பூனை யையும் ஆனையாக்க வேண்டுமே."

வாழ்த்துதலால் வாழ்த்துவோர் வாய் இனிக்கும் ; கேட்போர் செவி இனிக்கும் ; வாழ்த்துக்கு உரியவர் நெஞ்சு இனிக்கும். இனியவை கூறுதலே கனியெனச் சொன்னால், செவ்விய வாழ்த்து தல் ஔவையுண்ட நெல்லிக்கனி போல் அருஞ்சுவையுடையதாகும். அதனால் அன்றோ, "நீலமணிமிடற்றொருவன் போல மன்னுக பெரும நீயே" என்று ஔவையார் வாழ்த்தும் பேறுபெற்றான் அதிய மான் ! கனியாலா ? கனிதந்த கனிவாலா ? தான் வாழக் கருதாமல் தண்டமிழ் வாழ வாழும் ஔவை வாழவேண்டும் என்ற நேய நெஞ்சுக்கு உருகி நின்று, உரைத்த வாழ்த்தே இஃது.

'ஒழிக' என்பதும் வாய்தான் ! 'வாழ்க' என்பதும் வாய்தான். வாய்க்கு மணம் தருவது எது ? ஒழிகவா ? வாழ்கவா ? மணம் தரு வதைச் சொல்க ; சொல்ல முடியவில்லையா ? மணம் தாராததைச் சொல்லாமலேனும் விடுக ! அடியாமல் விட்டுவிட்டால், தானே படுத்துவிடும் பந்து ! ஆட்டாமல் விட்டுவிட்டால், தானே நின்று போகும் ஊசல் ! நேரில் காண்பதை நிகழ்த்திக் காட்டுவதுதானே முறை !

முதியர் இளையரை வாழ்த்துவதா ? இளையர் முதியரை வாழ்த்து வதா ? யாரை யார் வாழ்த்துவது ? இளையர் முதியரை வணங்கு வதும், முதியர் இளையரை வாழ்த்துவதும் வழக்கம். அதற்காக 'இளையர் முதியரை வாழ்த்துதல் கூடாது' எனின் முறையன்றாம்.

உலகைப் படைத்த ஒருவனை வாழ்த்துகிறோம். அதற்குப் பெயரே கடவுள் வாழ்த்து! நாம் வாழ அவனை வாழ்த்துகிறோம்! அவ்வாறே, பெருமக்களும் நல்லோரும் வாழ்த்தப் பெறுவதால், பெருமையும் நன்மையும் வாழ்த்தப்பெற்று, நமக்கே நன்மை தருவதாம்! பன்னீரை இறைத்தால் இறைப்பவனுக்கு மணவாதா? சந்தனம் பூசிவிட்டால், பூசிவிடுபவனுக்கு மணவாதா?

வாழ்த்துக்கு அடிப்படை உள்ளார்ந்த அன்பு அவ்வன்புடையோர் எவரையும் வாழ்த்தலாம். அவ் வாழ்த்து இருபாலும் இன்பம் சேர்க்கும்.

வாழ்த்தின் நோக்கம், எதையேனும் எதிர்நோக்குவது அன்று. 'அதுகிடைக்கும்' 'இதுகிடைக்கும்' என எதிர்பார்த்து வாழ்த்தும் வாழ்த்து, உண்மை வாழ்த்து அன்று! ஏமாற்றுவேலை! பூசிப் பசப்பி ஏசிக்கழிக்கும் வேலை! வாழ்த்தின் நோக்கு வாழ்த்துதல் ஒன்றே!

கையசைவே வாழ்த்தா? வாயசைவே வாழ்த்தா? கண்ணசைவே வாழ்த்தா? எதுவானால் என்ன? வாழ்த்துவார் நெஞ்சம் வாழ்த்தப் பெறுவார் நெஞ்சுக்கு நிறைவு செய்வதாய் அமைய வேண்டும். அவ்வளவே!

மணிக்கணக்காக வாழ்த்தும் வாழ்த்தில் உண்டாகும் உள்ள உருக்கத்தினும், மணித்துளிப்பொழுது வாழ்த்தும் வாழ்த்திலே, உருக்கம் மிக்கிருப்பது இல்லையா? அதனினும் கண்மணியசையும் ஓர் அசைவிலே உண்மை உருக்கம் வெளிப்பட்டுவிடுவது இல்லையா? வாழ்த்தின் மதிப்பீடு நெஞ்சத்து அளவேயன்றி, வேறு அளவு இன்று.

இதோ, ஒரு வாழ்த்து: நெடுங்காலத்துக்கு முற்பட்ட வாழ்த்து ஆனால், காலத்தை வென்று இன்றும் பசுமையாகத் திகழும் வாழ்த்து.

வாழ்த்துபவன் முடியுடைவேந்தன்; வாழ்த்துப் பெறுபவன் அவன் குடிபடைகளுள் ஒருவன். வாழ்த்துபவன் போரேர் உழவன்; வாழ்த்துப் பெறுபவன் சீரேர் உழவன்; வாழ்த்துபவன் மதிலும் கோட்டையும் மாடமும் கூடமும் மலிந்த மாநகராளி. வாழ்த்துப் பெறுபவன் வயலும் சோலையும் தோட்டமும் துரவும் சூழ்ந்த சிறுகுடியாளி. இத்துணை வேறுபாடுகள் இருப்பினும் நெஞ்சார்ந்த வாழ்த்துப் பிறக்கிறது. நெஞ்சுக்கு வேண்டுவது உண்மை! உண்மைகண்ட இடத்து, நெஞ்சு, கொஞ்சி விளையாடுவதும் உண்மை!

பெருநடை நடந்து சிறுகுடியை நெருங்குகிருன் வேந்தன். செல்லும் வழியில் முட்ட நிரம்பிய வயிற்ருெடு, கிட்ட நெருங்கி வருகிறது ஒரு கூட்டம். அவர்கள் அகத்து மகிழ்ச்சி முகத்து வெளிப்படுகிறது. அவர்கள் பாடிப் பிழைக்கும் பாணர்கள் !

பாணர்களை நோக்கிய அதே பொழுதில் ஓர் அரவம் வேந்தன் செவியில் கேட்கிறது ! முட்டைகளைத் தூக்கிக்கொண்டு, திட்டை மேலே ஏறும் எறும்பு வரிசைகள் போலச் சோற்றுக் கலங்களைத் தாங்கிக்கொண்டு, இப்பாலும் அப்பாலும் வரிசை வரிசையாகச் சிறுவர்கள் செல்வதைக் காண்கிருன் ! “இந்த அரவம் எங்கே இருந்து வருகிறது ? இச் சிறுவர்கள் எங்கிருந்து எங்கே போகிருர் கள் ? நான் தேடிவரும் சிறுகுடி அணித்தே தோன்றும் இவ்வூரோ? அன்றி வேருேர் ஊரோ ?'' எனத் திகைக்கிருன் ! அவன் திகைப்பை வினவாக்கிப் பாணர்களிடம் கேட்கிருன். தான் பார்க்க வந்த பண்ணன் சிறுகுடி ஈதே என்றும், பண்ணன் வழங்கிய உணவை உண்டு மகிழ்வார் ஒலியும், கொண்டுசெல்வார் வரிசையுமே தான் கேட்பதும் காண்பதும் என்றும் அறிந்துகொள்கிருன்.

நாட்டில் பசியும் பிணியும் பகையும் நலிவும் இல்லாமல் காக்க வேண்டுவது காவலனும் என் கடன் ! என் கடனை என்னைப் பார்க் கிலும் இவனல்லனே நன்ருகச் செய்கின்ருன். என் கடனை நானே செய்தலில் என்ன சிறப்பு இருக்கிறது ? 'என் கடமையைச் செய் தேன்' என்ற அளவில் ஓர் நிறைவு. அவ்வளவே; ஆனல், இவன் செய்வதோ, உயிர் இரக்கம் ஒன்ருலே செய்யும் உயர்வற உயர்ந்த உயர் செயல்! இவனன்ருே உலகை வாழவைப்பவன்? வாழவைப்பதற்காக நெடிது வாழவேண்டியவன்?

பண்ணன் ! ஆ! ஆ! பண்ணன்! இப்பெயர், எத்துணைப்பேர் இசைத்து மகிழ்ந்த பெயர் ! இசைந்து வழங்கிய பெயர்! இசை எவ ரையும் இசையவைப்பது ! இவ்விசையாளன் தன் இனிய கொடை யால், இசைபோலவே எவரையும் இசைய வைத்துள்ளான் ! பண் அன்னவனை எப்பெயரால் அழைப்பது ? 'பண்ணன்' என்பதே தகும் ! நல்லவற்றைத் தேர்ந்து தேர்ந்து பண்ணும் நல்லோனைப் 'பண்ணன்' என்றது எத்தகைய பொருத்தம் ! பண்ணன் வாழ்க ! 'பண்ணவன்' வாழ்க ! பண்ணையாளனும் இவன் வாழ்க !

மருத்துவர் என்ன செய்கிருர் ? உடற்பிணியைத் தீர்க்கிருர். அப்பிணி தீர்ந்தார்க்கும், பிணி இல்லார்க்கும் தீராப்பிணியாக இருப்பது ஒரு பிணி, அது பசிப்பிணி! பசிப்பிணி, பாழ்ங்கொடும் பாவி ! அப் பாவியின் பிடியில் சிக்கியோர் எய்தும் துயர்க்கு

அளவில்லை; கேட்டுக்கும் அளவில்லை. ஆதலால் பசிப்பிணி தீர்ப்போர் அறவோர்; அவர் பிறரையும் அறவோர் ஆக்கும் பெருந் தகையர். ஆனால் அவர்பணி, சோம்பர்களையும் மடையர்களையும் ஆக்குவது அன்று! அத் திருப்புகழ்ப் பணியைத், தெளிவில்லாதார் செய்யின் சட்டி தூக்கிச் சாய்ந்துறங்கும் கூட்டமே பெருக்கெடுக் கும்! நாட்டைக் கெடுக்கும்! இவன்பணி அத்தகைத்தன்று; உண்மையில் வாடுவோர்க்கு -உழைத்து உருக்குலைவோர்க்கு-உயிர் இரக்கத்தால் உதவும் பணி! ஆதலால் பசிப்பிணி மருத்துவனும் இப் பண்ணன் வாழ்வானாக!

'நீடுவாழ்க!' என்பேனா? வாழ்த்து என்பதே அதுதானே! காவலன் கடமையை ஆவலுடன் தாங்கிக் கண்ணெனப் போற்றும் இவன், ஒரு சிறந்த காவலன்! ஆதலால் காவலனும் என் வாழ் நாளையும் இவனே எடுத்துக்கொண்டு நெடுங்காலம் வாழ வேண்டும். 'என் வாழ்நாள் எத்துணை?' எனக்குத் தெரியாது! ஆனால், அவற்றை எல்லாம் ஒருங்கே வழங்க உடன்பாடு கொள் கிறது என் ஆர்வம்! என்னால் கூடுவது அதுவே. இதனை நன்றி யுணர்வால் யான் கூறுகிறேன் என்பது இல்லை; நாட்டு வேந்தனும் நான் பட்டுள்ள தீராக்கடனைத் தீர்ப்பதற்காகக் கூறுகிறேன்! என் வாழ்நாளையும் இவன் கொண்டு வாழ்வானாக!

"யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய!"

* * *

ஒருவன் தன் வாழ்நாளை மற்றொருவனுக்குத் தந்து வாழ வைக்கவும் முடியுமோ? 'முடியும்' என் ஓரிரு சான்று காட்டுவார் காட்டுக! 'முடியாது' எனக் கூறுவார் கூறுக! நெஞ்சார்ந்த உணர் வோடு தருதற்கு, முந்து வந்து நின்றானே அந்த வேந்தன்! அந்த உணர்வு எளிதில் காணக்கூடியதோ?

உடலுக்கு **'மெய்'** என்பது ஒருபெயர். பொய்யாய் ஒழிவதைத் தன் எண்ணத்தாலும் சொல்லாலும் செயலாலும் மெய்யாக்கும் மேன்மைக்கு இடமாக இருக்கும் அது பொய்யோ? மெய்யேயாம்! அந்த மெய்யைப் போற்றிய **மெய்யன்**-சோழன் குளமுற்றுத்துத் துஞ்சிய **கிள்ளிவளவன்**-உணர்வு எங்கே? வாழ்வோர் வாழ வாழ்பவனுக்குத் தன் வாழ்வையே தர வழிநடந்து வந்து வாழ்த் துரைத்த **அந்த உணர்வு எங்கே?** எளிதில் காணக் கூடுவதோ?

சங்கநூற் காட்சிகள் :

மழையே! மனமிரங்காயோ?

[டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,]

மனம் கவரும் மாண்பு :

தலைவனோடு கலந்து இன்புறும் தலைவியின் இதயத்தை எடுத்துக்காட்டும் எண்ணற்ற பாட்டுக்கள் சங்கநூல்களுட் காணப் பெறும்; அஃது அல்லாமலும், பிரிந்து பேதுறும் துயரத்தைத் தெரி விக்கும் தலைவி கூற்றாக வரும் கவிதைகளும் காணப்பெறும். இவையனைத்தையும் ஆண், பெண் ஆகிய இருபாற் புலவர்களும் பாடியுள்ளனர். இவர்கள் பாட்டுக்களில் கற்பனை, உணர்ச்சி ஆகிய இரண்டிற்கும் சிறிதும் வேறுபாடு காண இயலவில்லை. மனம் கவரும் மாண்புடைய இத்தகைய கவிதைகளை உணர்ச்சி முத்துக்கள் என்று கூறல் பொருந்தும். தக்க சான்று ஒன்றை இங்குக் காண்போம்.

கற்பனைப் பின்புலம் :

களவுநெறியில் தலைவி ஒருத்தியைத் தன் உள்ளத்திற் கொண்ட தலைவன் ஒருவன் நாள்தோறும் அவளைச் சந்தித்து, உரையாடிக் கலந்து மகிழும் இயல்பினன் ஆயினன். அத்தகைய நாட்களில் ஒருநாள் பற்றிய கற்பனை புலமை, உள்ளத்தில் விரி கின்றது.

நேரடிப் பேச்சு அன்று :

தலைவன் இரவு நேரத்தில் வந்து தலைவியைத் துணிந்து கண்டு மகிழ்கின்றான். இவ்வாறு இராப்பொழுதில் மனையின் அண்மையிலே குறிப்பிட்ட இடத்தில் வந்து சந்தித்தலை "இரவுக் குறி' என்று அக்கால மாந்தர் வழங்கினர். இரவுக்குறி யிடத்தே வந்த தலைவன் ஒருவனுடைய காதலி அவன் செவிகளில் விழுமாறு சில வார்த்தைகளைக் கூறுகின்றாள்.

தலைவனிடம் நேரடியாகப் பேசாத பேச்சு இது. இயல்பாகவே நாணமும், மடமும் முதலிய பெண்மை இயல்புகள் நிறைந்த பெண் ஆதலின், அவனிடம் கூறவேண்டிய செய்தியைப் புறவுரையாகக் கூறுகின்றாள்.

தலைவன் தலைவியைச் சந்திக்க வந்த அந்த இரவுப்பொழுதில் பெருமழை வேறு பெய்யத் தொடங்கிற்று. இடி பேரோசை செய் தது; மழை 'சோ' வென்று கொட்டிற்று; பெருமழை! விடாத

மழை. பக்கத்திலே உள்ள மலைகளின் புறத்தே பட்டு எதிரொலித்தது இடியோசை. இந்தப் பெருமழையில் தனியனாய் வரும் தலைவன் நிலைக்கு அஞ்சுகின்றது அந்தப் பெண்மனம்.

திருமணம் வேண்டும் குறிப்பு :

தன்பொருட்டு இவ்வாறு இருளிலும் மழையிலும் வருகின்ற துன்பம் தவிர்க்கவேண்டும் ஆயின், திருமணத்தால் தன்னை உரியவளாக்கிக் கொண்டு கற்பொழுக்கம் தலைப்படவேண்டும் என்பது தலைவியின் கருத்து. அதனை வெளிப்படையாகக் கூறுது அவளது பெண்மை தடுக்கின்றது ; ஆயினும் நுட்பமான அறிவுடைய பெண் ஆதலின் வேறுவகையாக அக் கருத்தை உணர்த்துகின்றாள் ; இரவுக்குறி வருகின்ற தன் உள்ளத்துக்கு இனியவன், திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற கருத்தை அவளது பேச்சு அவனுக்கு உணர்த்திவிடுகின்றது. ('வரைவு கடாதல்' என்று இதனை அக்கால மாந்தர் வழங்குவர் ; வரைவு-திருமணம்)

அப்படி என்னதான் பேசினாள் அந்தத் தமிழ்ப்பெண் ?

அங்குதான் அக் கவிதையைப் படைக்கின்ற புலமைப் பெருமாட்டி ஔவையாரின் கற்பனையும், கவிநலமும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு உயர்கின்றன.

பாட்டின் பொருளமைப்பு :

ஆம் ; இடித்து முழங்கி மின்னிப் பெய்யும் பெருமழையைக் கூப்பிட்டுப் பேசுகின்றாள் :

> "ஏ மழையே ! உயர்ந்த மலைகளின் பக்கத்திலுள்ள பாம்புகள் இறந்துவிடும்படியாக இடிக்கின்ற இடியோடு— மிக்க வேகத்துடன் கூடிய இடிமுழக்கோடு, காற்றும் கலந்து பெய்கின்ற, நிறைந்த நீர் முகில்கள் பெற்ற பெருமழையே ! உனக்குக் கொஞ்சம்கூட இரக்கம் இல்லையா ?"

என்கின்றாள் ; அதற்கான காரணத்தை அடுத்துப் பேசுகின்றாள் ; எப்படி ?

> "உன்னால் துயருறுகின்ற பெண்டிர் துணைவரைப் பிரிந்து தனித்து வாழ்கின்றவர் (என்னைப் போன்றவர்) ஆதலின் இரக்கத்துக்குரியவராக உள்ளனர். ஆதலின் நீ ஏன் இவ்வாறு பெய்து அவர்களை வருத்துகின்றாய் ?"

இவ்வாறு கூறி முடிக்கின்றாள் ; "பெரும் புகழை உடைய இமயமலையையும் கூட அசைத்து விடுவாய் போலிருக்கிறதே ! அத்துணைப் பேராற்றல் பெற்றிருக்கிறாய்" என்று கூறி மழையின் கடுமை, காற்றின் வேகம் இரண்டையும் விளக்கி விடுகின்றாள்.

ஆம் ; அந்தச் சொற்கள்—

"பேரிசை, இமயமும் துளக்கும் பண்பினே !"—இத்தகு பேராற்றல் படைத்தநீ துணைவரைப் பிரிந்த தோகையரை வாட்டுவது பொருத்தமாக இல்லையே என்ற குறிப்பு.

மழையைக் குறித்துக் கூறுவாள் போன்று தன் மனத்துக் குற்ற கருத்தைத் தன் மணவாளனுக்கு உணர்த்தி விடுகின்ருள் இந்த ஒண்டொடியாள். மிகச் சிலவாய வரிகளில், அரும்பொருளாழமுடைய, இக் கவிதை காதல் துயரம், இயற்கைக் கேடு, காதலர் ஏக்கம் ஆகியவற்றை எத்துணைத் தெளிவாக உணர்த்துகின்றது !

பாட்டின் வடிவம் :

ஔவையாரின் இக் கருத்தோவியம் பின்வருவது :

"நெடுவரை மருங்கிற் பாம்புபட இடிக்கும்
கடுவிசை உருமின் கழறுகுரல் அளைஇ
காலொடு வந்த கமஞ்சூல் மாமழை
ஆரளி இலையோ நீயே? பேரிசை
இமயமும் துளக்கும் பண்பினே !
துணையிலர் அளியர் பெண்டிர் இஃதுஎவனே"

(குறுந்தொகை—158—ஔவையார்)

ஆழ்ந்த உணர்வுப் பெட்டகம் :

ஆறுவரிகளைக் கொண்ட இந்த அழகிய கவிதை ஆழ்ந்த உணர்வுகளைத் தூண்டுவதாக அமைந்துள்ளமையின், பன்முறை படிக்கத் தூண்டுவது கண்கூடு. அதற்கேற்றபடி சின்னஞ்சிறு சொற்கள், தொடர்கள் இதில் கையாளப்பட்டிருக்கின்றன. 'இமய மலையையும் கூட அசைத்துவிடும் பண்புடைய மழை' என்ற தொடர் பெய்துகொண்டிருந்த பெருமழையின் கடுமையை மிகத் தெளிவாகக் கூறிடக் காணலாம் ; அவ்வாறே பெண்டிரை-வருத்துவது சரியன்று என்ற உணர்வை வற்புறுத்தக் காணலாம்.

"ஓர் ஆழ்ந்த உணர்ச்சியின் தெளிவான-சுருக்கமான வெளியீடே ஒரு கவிதையின் உள்ளடக்கமாக அமைகின்றது" என்று இக்காலத் திறனுய்வாளர் கூறுவதற்கு இந்தக் கவிதையையே தக்க எடுத்துக்காட்டாகக் கூறலாம் அன்ரோ?

["A poem may, in content, by anything from a very short and simple expression of a single mood"— Marjorie Boulton, "The Anatomy of Poetry" (1953)-P 98]

— —

தெலுங்குப் பழமொழிகள்

[பேராசிரியர் இரா. மதிவாணன்]

தெலுங்கில் மட்டும் வழங்குவதாகவும் ஏனைத் திரவிடமொழிகளில் வழங்காதனவாகவும் உள்ள சில பழமொழிகளைத் தெலுங்கர் குறிப்பிடுகின்றனர். அவற்றுள், ''சினேகமு கலிகினசோட்ட அப்புதீய ராது'' (நட்புக்கொண்டு பழகியவரிடத்தில் கடன் வாங்கலாகாது) என்பதும் ஒன்று. 'கடன் அன்பைக் கெடுக்கும்' என்று இது தமிழிலும் வழங்கிவருகிறது.

இதைப் போன்றே மலையாளத்தில் மட்டும் வழங்குவதாகவும் ஏனைத் திராவிட மொழிகளில் வழங்காதனவாகவும் உள்ள சில பழமொழிகளை மலையாளிகள் குறிப்பிடுகின்றனர். அவற்றுள், ''பழஞ்சொல்லினு பதரில்ல'' (பழமொழிகளில் பதர் இல்லை) என்பதும் ஒன்று.

> ''பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
> மக்கட் பதடி எனல்''

என்னும் குறளில் பதடி என்று வள்ளுவர் கையாளும் அதே சொல்லாட்சி இப்பழமொழியில் இடம் பெற்றிருப்பது உவப்பளிக்கிறது. பழமொழிகளில் பயனற்றவை எவையும் இல என்னுங் கருத்தில் அனைத்துத் திரவிட மொழிகளிலும் இத்தகு பழமொழி வழங்கியிருந்து பிற்காலத்தில் மறைந்திருக்கவேண்டும். திரவிட மொழிகளில் பழமொழிகளைத் திரட்டும் முயற்சி முறையாகவோ நிறைவாகவோ செய்யப்படவில்லை.

தமிழிலும் மலையாளத்திலும் பத்தாயிரத்துக்குக் குறையாமல் பழமொழிகள் திரட்டப்பட்டுள்ளன. நாட்டுப்புறங்களில் பழமொழிகளைத் திரட்டும் முயற்சியைத் தமிழாசிரியர்களும், ஆய்வு மாணவர்களும் இன்று மேற்கொள்ளினும் மேலும் பத்தாயிரம் பழமொழிகளைத் திரட்டக் கூடும். மாந்த வாழ்க்கையில் பல்வேறு துறைகளின் பட்டறிவுப் பிழிவாகவும் வாழ்வாங்குவாழ வழிகாட்டும் மந்திரமொழிகளாகவும் விளங்கும் பழமொழிச்செல்வம் ஒருமொழியிலக்கியத்தின் தனிச்சிறப்புக் கூறுகும். அவற்றை முறையாகத் திரட்டி ஒப்பு நோக்கினல் நான்கு திரவிடமொழிகளிலும் ஒரே கருத்துடைய பழமொழிகள் ஒருங்கு வழங்கியுள்ளன என்று தெளியலாம். தெலுங்கில் மட்டும் வழங்குவனவாக அவர்கள்

நிலைத்திருந்த பழமொழிகள் பல தென்திரவிடம் அனைத்திலும் வழங்குவதைக் கீழ்க்கண்ட எடுத்துக்காட்டுகளால் அறியலாம் :

1. தெலுங்கு—ஒக்க தப்ப ரண்டு முக்கலு
தமிழ்—வெட்டு ஒன்று துண்டு இரண்டு
மலையாளம்—வெட்டொண்ணு துண்டு ரண்டு
கன்னடம்—வெட்டு ஒந்து துண்டு எரடு

2. தெ. ஆக்கு மீத முள்ளு பெட்ட முள்ளுமீத ஆக்குபெட்ட ஒக்கட்டெ.
த. இலைமீது முள் வீழ்ந்தாலும் முள்மீது இலை வீழ்ந்தாலும் கேடு இலைக்கே.
ம. இல முள்ளில் வீண்ணாலும் முள்ளு இலயில் வீண்ணாலும் கேடு இலய்க்கு
க. எலெ முள்ளு மேலே பித்தரு முள்ளு எலெ மேலே பித்தரு கேடு எலகெ

3. தெ சிப்பலோ நீரு சீமகு சமுத்ரமு
த சிரட்டைத் தண்ணீர் எறும்புக்கு சமுத்திரம்
ம சிரட்டயில் வெள்ளம் எறும்பினு சமுத்திரம்
க கெரட்டெ நீரு இருவகெ சமுத்ர

4. தெ மனோவியாதிகி மந்து லேது
த மனநோய்க்கு (வியாதிக்கு) மருந்தில்லை
ம மனோவ்யாதிக்கு மருந்நில்ல
க மனோரோககெ மத்தில்ல

5. தெ ஆவுலு நலுபய்தெ பாலு நலுபா
த மாடு கருப்பானல் பாலும் கருப்பா
ம பசு கருத்தாலும் பாலு கருக்குமோ
க ஆக்களு கப்பாதரெ ஆலு கப்போ

குறிப்பு : ஏனைத்திரவிடச் சொற்களின் சரியான பலுக்கம் (pronunciation) குறிக்கும் வகையில் பின்வரும் எழுத்துக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

Ga—க, Ja—ச, Ba—ப, Da—ட, Dha—த, Ka—க, Tha—த, Cha—ச.

6. தெ உங்கரால சேதிதொ மொட்டிதெ நொப்பி உண்டது
த குட்டு பட்டாலும் மோதிரக்கையால் படவேண்டும்
ம அடிகொண்டாலும் மோதிரமிட்ட கைகொண்டு வேணம்
க உங்கர ஆகித கய்யல்லி ஒடதரெ நோவில்ல

7. தெ அன்னம் பெட்டின வாரில்லு கன்னமு பெட்ட வச்சுனு
த அன்னமிட்ட வீட்டில் கன்னமிடலாகாது
ம அன்னமிட்டிடத்து கன்னம் வய்க்கருது
க அன்ன ஆகித மனெகெ கன்னவே

8. தெ ஊரன்தா சுட்டாளு ; உட்டி கண்டதாவலேது
த ஊரெல்லாம் உறவு ; ஒருவாய்ச் சோறில்லை
ம ஊரெல்லாம் உற்றவர் ; ஒருவாய் சோறில்ல
க ஊரெல்லா நண்ட்டத ; உணபடிசு வவரில்ல

9. தெ சேதிலோ காசு நோட்டிலோ தோச
த கையிலே காசு வாயிலே தோசை
ம கையிலெ காசு வாயிலெ தோச
க ஆ கையல்லி காசு ஈ கையல்லி தோசெ

10. தெ சொண்ட்டி லேனி கசாயமு லேது
த சுக்கில்லாத கசாயம் உண்டா
ம சுக்கிலாத்த கசாயமில்ல
க சுண்ட்டி இல்லதெ கசாய வில்ல

தெலுங்கில் நகைச்சுவை நிரம்பிய பழமொழிகளும் உள்ளன. வீட்டிற்கு மருமகன் வந்த வேளையில் சுவையான விருந்து வைக்க மாமனாரிடம் அறவே பணமில்லாதபோது,

"அங்கடிலோ அன்னி
அல்லுனி நோட்டிலோ சனி"

"கடையில் எல்லாம் இருக்கிறது. ஆனால் மருமகன் வாயில் சனியன் குடியிருக்கிறதே, என் செய்வேன்," என்று அந்த மாமனார் கூறினாராம்.

———

திகட சக்கரம்

[நக்கீரன் வழியடிமை, புலவர். பி. மா. சோமசுந்தரனுர்]

1. திருத்தொண்டர் புராணம் :

பெரிய புராணம் தமிழக வரலாற்றை எடுத்துரைக்கும் தலை சிறந்த இலக்கியம் ஆகும். இது தமிழர் நாகரிகம், தெய்வங் கொள்கை ஆகியவற்றின் மூலபண்டாரமாகவும் திகழ்கிறது. தன்னேரில்லா இலக்கண நூல் ஆகிய தொல்காப்பியத்தையும், இலக்கியம் ஆகிய திருக்குறளையும் தன்னகங்கொண்டு அவற்ருேடு ஒப்பவைத்தெண்ணும் தலைமையும் கொண்டது. இதன் பெருமை முற்றுற மொழிதற்கு இயலாது.

இதனை அருளியவர் சேக்கிழார் பெருமான். அம்பலவாணர் 'உலகெலாம்' என்று அடியெடுத்துத் தந்தருள, அதனை முதலாக (நடுவினும் இறுதியினும் கூட விளங்க) வைத்து ஆசிரியர் பெருமான் நூல் அருளிச் செய்தார். இஃது உண்மையுரையே அன்றிப் புனைந்துரை அன்று என்பதை,

> ''அருளி னீர்மைத் திருத்தொண் டறிவருந்
> தெருளி னீரிது செப்புதற் காமெனில்
> வெருளின் மெய்ம்மொழி வானிழல் கூறிய
> பொருளி னுகு மெனப்புகல் வாமரோ''

எனவரும் சேக்கிழார் பெருமான் திருமொழியே நிலை செய்யும். இத்துணை விழுமிய நூலுக்கு அடியெடுத்துத் தந்தருளிய பெருமை அம்பலவாணர்க்கே உரியது.

2. தமிழ்க் கந்தபுராண வரலாறு :

வடமொழியில் உள்ள கந்தபுராணம் மிகப் பரந்து கிடப்பது. இது நோக்கியே 'எந்தப் புராணமும் கந்தபுராணத்தில்' என்று ஒரு மொழியும் வழங்குகிறது. தலபுராண ஆசிரியன்மார்க்கு இது புகல் அளிக்கிறது. வாய்மையன்றேனும் இஃதே தங்கட்கு முதல் நூல் என்று அன்னோர் வழுத்திச் செல்வர். எடுத்துக்காட்டாக,

> ''புண்ணிய முனிவன் சூதற் கோதிய புராணம் மூவா
> றெண்ணிய அவற்றுள் காந்தத் தீசசங் கிதையின் மாதோ''

என்று பரஞ்சோதி திருவிளையாடல் புராணம் பகர்தல் காண்க.

தமிழ்க் கந்தபுராணம் முருகன் திருவிளையாடல் ஒன்றையே கூறிச் செல்வது. காஞ்சிபுரம் குமரகோட்டப் பூசகராய் இருந்த கச்சியப்ப சிவாசாரியர் என்பவரால் ஆக்கப்பட்டது.

இந் நூல் தோற்றம் பற்றி ஒரு கதை வழங்குகிறது. அது வருமாறு:

முருகன் நூலாசிரியரின் கனவில் எழுந்தருளித் தன் வரலாற்றைப் பாடும்படி பணித்துத் "திகட சக்கரச் செம்முக மைந்துளான்" என்று அடியெடுத்துக் கொடுத்தான். ஆசிரியர் அவ்வாறே பாடத்தொடங்கி நாள்தோறும் தாம் பாடிய பாடல்களை முருகன் திருவடிக் கீழ் வைத்துச் செல்வர். மறுநாள் நோக்குங்கால் அவை திருத்தப்பட்டிருத்தலைக் கண்டு திருவருளை வியந்து இன்புறுவர். நூல் முற்றுப்பெற்று அரங்கேற்றம் நிகழ்ந்தபோது திகழ்+தசக்கரம் என்பவை புணர்ந்து திகட சக்கரம் என்றாதற்கு விதி இல்லையே என்று புலவர் ஒருவர் தடை கிளத்தினார். அது நீக்குவான் முருகனே ஒரு புலவர் வடிவில் வந்து வீரசோழியத்தில் உள்ள விதியைக் காட்டிப் பின் மறைந்தான். அவையோர் வியப்புற்று நூலாசிரியரின் பெருமையை உணர்ந்து போற்றினர். கச்சியப்பருக்கும் வீரசோழியத்துக்கும் பெருமை சேர்க்கும் இந்தக் கதைக்குத் தக்க சான்று கிடையாது. எனவே இதன் உண்மையை ஆய்ந்து காண்போமாக.

3. சான்றோர் வழக்கு :

தண்டமிழன்னைக்குத் தளராது பணியாற்றியவர் உயர்திரு. சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள். கலித்தொகை, தொல்காப்பியம் (சொல்), இறையனார் அகப்பொருள் முதலிய பல நூல்களை ஆராய்ந்து பதிப்பித்தவர். இவர் இக் கதையைக் குறிப்பிடுகின்றார். பல சைவ நூல்களையும் நன்னூலையும் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தையும் ஆராய்ந்து பதிப்பித்தவர் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர். இவர் இக் கதையைப் பத்திச்சுவை நனிசொட்டச் சொட்ட விரித்துரைக்கின்றார். ஏனைய வீரசோழியப் பதிப்பாசிரியன்மாரும் கந்தபுராணம் பற்றி எழுதப்புகும் புலவன்மாரும் இக் கதையைக் குறிப்பிடத் தவறுவதில்லை.

ஆறுமுக நாவலருக்குப் பின்வந்த அவர்தம் உறவினர் சபாபதி நாவலர் வீரசோழிய விதி கொள்ளத்தக்கதன்று என இகழ்ந்து மறுத்துள்ளார். இந்த இகழ்ச்சியும் இவர் தாமோதரம் பிள்ளையவர்கள்பால் கொண்ட வீண் காழ்ப்புணர்ச்சியால் எழுந்ததோ என்று ஐயம் எழுகின்றது. இவர் கொண்ட காழ்ப்புணர்ச்சியை,

> "தீயூழ் வசத்தால் தம்மதம் மறுத்துப் பரமதம் தழுவிப் பழியூண்ட தம்வரலாறு வாய்சோர்ந்து புலம்பி யானும் அறியேன் அவளும் பொய்சொல்லாள் என்பதை விளக்கி யிட்டனர் என்றுணர்க" (திராவிடப் பிரகாசிகை)

எனவரும் இவர் உரையே நன்கு உணர்த்தும். எனவே இத்தகை யோர் மறுப்பு ஏற்றுக் கோடற்பாலதன்று. வீரசோழியத்தை மறுக்கும் இந்தக் கந்தபுராணத் தோற்றக் கதையை மறுக்கின்றரா என்பதும் தெளிவாகவில்லை.

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் என்பதே தமிழ் மரபு. இலக்கணம் கண்டதற்கு இலக்கியம் என்பது அன்று. (பின்னுளில் எழுந்த தஞ்சைவாணன்கோவை, சிதம்பரச்செய்யுட்கோவை முதலிய நூல்கள் இலக்கண விளக்கம் செய்வான் எழுந்தவை. அவையும் சிறு பான்மையே என்று உணர்க). எனவே இதற்கு அடிப்பட்ட சான்றோர் இலக்கியம் உண்டோ என்று ஆய்தலே முறையாம் என்க.

ஆயின், திகழ்+தசக்கரம் என்பதைத் திகட சக்கரம் எனப் புணர்த்திப் பாடுதற்குச் சான்றோர் வழக்குண்டோ எனில் உண்டு என்க. கொள்ளை கொள்ள வீடு உதவிக் கூற்றைப் பிடர் பிடித்துத் தள்ளும் திருஞானசம்பந்தப்பெருமான்,

> "துகடுறு விரிதுகி லுடையவ ரமணெனும் வடிவினர்
> விகடம துறுசிறு மொழியவை நலமல வினவிடல்
> முகிடரு மிளமதி யரவொடு மழகுற முதுநதி
> திகடரு சடைமுடி யடிகடம் வளநகர் சேறையே"

என்றருளிய பாடற்கண் இவ் வழக்கு பயிலல் காண்க. இஃது அறிந்தார் தடை கிளத்துவரோ? செந்தமிழ்க் கடவுளாம் முருக னுக்கு வீரசோழியத்தைக் கையில் பிடித்துக்கொண்டு வரும் விதி தான் ஏற்பட்டிருக்குமா? எனவே இக் கதை கட்டினுர் தமிழை நன்கு பயிலாதாரே என்க. இதனை அறியாத திராவிடப் பிரகாசிகையார்,

> "சங்கத்துச் சான்றோர் இலக்கியங்களுள்ளும், பிற ஆன்றோர் இலக்கியங்களுள்ளும் அவ்வாறு போந்த பிரயோகம் யாண்டும் காணப்படாமையானும், இனி அவ்வாறு போந்த இலக்கியம் காணப்படினும் தொல்காப்பிய மாறுகோள் ஆதலின் வழு என்று களையப்படுவதல்லது இலக்கணம் என்று தழுவப் படாது ஆகலானும் அது பொருந்தாதென்று ஒழிக"

என்று கூறிவைத்தார். இதனுல் திருஞானசம்பந்தப் பெருமான் ஆன்ரோர் ஆகார் எனவும் அவர்மொழி வழு என்று களையப்படுவது எனவும் கூறினாராயினர். இன்னும் இதனாலே கந்தபுராண ஆசிரியரும் குற்றப்பட்டவரே ஆவர். சபாபதி நாவலர் மறுப்பின் விளைவு இவை.

4. கதை எழுந்த காரணம்:

இதுகாறும் கூறியவற்ருல் கனவில் முருகன் அடியெடுத்துத் தந்து பாடச் சொன்ன கதை புனைந்துரையே என்பதும் கச்சியப்பர் கந்தபுராணம் பாடியது தம் முயற்சியினாலேயே என்பதும் பெறப் படும். ஆயின் இப் புனைகதை எழுந்த காரணம் என்னையோ எனில், கூறுவாம்.

அம்பலவாணர் அடியெடுத்துக் கொடுத்தும் உள் நின்று இயக்கியும் வெளிப்படுத்திய பெரிய புராணத்துக்கும் அதன் ஆசிரியரான சேக்கிழார் பெருமானுக்கும் உள்ள மாண்புக்கு எல்லை யுண்டா? அன்று அரசர் பெருமானுலும் மக்களாலும் பெரிய புராணம் போற்றப்பட்டது. இன வேற்றுமை, சமய வேற்றுமை, மொழி வேற்றுமை இவையெல்லாம் கடந்து வரலாற்றறிஞன் மாராலும் இன்று போற்றப்படுகின்றது. இத்துணை மாண்பு, பெரும்பான்மையும் அறிவுக்கு ஒவ்வாத கற்பனையும், காம உணர்ச்சியுமே பொதுளும் கந்தபுராணத்துக்கும் கிட்டுமோ? எனினும் தமிழர் ஒருவர் இயற்றிய நூல் அத்துணை மேம்பாடுற, வேதியர் நூல் தாழ்நிலைப் படலாமா? எனவேதான் இக் கற்பனைக் கதை தோன்றியது. சேக்கிழாரினும் கச்சியப்பர் திருவருள் நிறைந் தவர் எனலைக் காட்ட முருகன் கையில் வீரசோழியத்தைத் திணித் தனர். ஆதிசைவர் தமிழரன்ரே? அவர் ஆரியர் ஆமாறு யாது எனில், பின்னுளைய ஆதி சைவர் தம்மையும் ஆரியரில் சார்த்திக் கொண்டு தம் இனத்தவரான தமிழரையே இழிவுடன் நடத்தத் தலைப்பட்டனர். தம் இனம் வாழ எவ்வாறு ஆரியர் மிருதிகளை வரைந்து வைத்துக்கொண்டனரோ அவ்வாறே ஆதி சைவரும் தம் இனம் வாழ ஆகமங்களில் ஒவ்வாக் கூற்றுக்களை வரைந்து வைத்துக்கொண்டனர். பறவையிலும் சேராது விலங்கிலும் சேராது உள்ள வௌவால் போன்று ஆரியரிலும் சேராது தமிழரிலும் சேராது ஒழுகுகின்றனர். ஆகலின் கற்பனைக் கதையும் கட்டுவா ராயினர் என்க.

எனவே, இத்தகு கற்பனைக் கதைகளைக் களைந்தெறிதல் தமிழரின் தலையாய கடன்மையாம்.

5. மறைமலை அடிகளும் ஈ. வே. ராவும் :

உலகத் தமிழ்ப் பேரவை கூடும் இந் நாளிலும் மற்றொரு மறைமலையடிகளாரும் மற்றொரு ஈ. வே. ராவும் தமிழகத்துக்கு வேண்டும் என்னும் என் கூற்று வியப்பை விளைவிக்கலாம். எனினும் இஃதே உண்மை நிலை ஆகும். செந்தமிழ் ஓங்கிட என்று தூய சிந்தையர் கூடிப் பணியாற்றும் இன்றும் கரவுறை உளத்தார் சிலர் செத்த மொழிக்கு உயிர் கொடுக்கவும் தமிழைக் கெடுக்கவும் முயல்கின்றனர்.

வள்ளிமலையில் வாழ்ந்த திருப்புகழ்ச் சாமி என்பார் சில பாடல்களைத் தொகுத்துத் ‘திருப்புகழ்ப் பாராயணத் தவநெறித் திருமுறை’ என்று ஒரு நூல் வெளியிட்டார். அதன் நான்காம் பதிப்பு 1978இல் வெளிவந்துள்ளது. அருட்கவி என்று கூறிக் கொள்ளும் சேதுராமன் என்பார் துணையோடு வெளிவந்ததாகக் காணப்படுகிறது. அந்த நூல் தமிழ் நூலா அல்லது கிரந்த எழுத்தில் உள்ள வடமொழி நூலா என்று காண்போர் ஐயுறுதிரார். முற்பதிப்புக்களுக்கும் இந்தப் பதிப்புக்கும் அத்துணை வேற்றுமை உள்ளது. இந்தச் சேதுராமன் என்பவரே அரும்பதவுரைக் குறிப்புக்கள் எழுதியுள்ளார். அவற்றில் ஒரு சிலவற்றை ஈண்டுத் தருகின்றேன் :

	அருஞ்சொல்		உரை
(1)	தவத்தினில்	=	தபஸில்
(2)	கலவி	=	ஸம்போஹம்
(3)	வீழியின்கனி	=	தேஜிநீபலம்
(4)	கயிறு	=	பொம்மலாட்ட ஸூத்ரம்
(5)	ஆலவிடம்	=	ஹாலாஹல விஷம்
(6)	காரணி	=	ஹாரணி; ஸம்ஹாரக்காரி எனலுமாம்
(7)	இதயம்	=	ஹ்ருதயம்
(8)	சந்திர வெளிக்குவழி	=	ஸஹஸ்ரார கமலத்தில் சந்த்ர கலாம்ருதம் உண்டு ஸுகம் பெறும் யோக மார்க்கம்
(9)	முன்பு செய்த பழி	=	ப்ராரப்த கர்மங்கள்
(10)	மாதவனும்	=	மஹா தபஸ்வியாய்

திருப்புகழில் உள்ள வடமொழிச் சொற்கள் தமிழ் எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தன. அவற்றை மாற்றியவர் இவரே போலும். சபாலம்பனம் என்பதை ஜபாலம்பனம் என்ருக்கி ஜபம் செய்த லாகிய பற்றுக்கோடு என்று உரை கூறினவர் அது ஸபாலம்பனம் என்றும் ஆகலாமே என்று எண்ணி ஸபைகளில் உள்ள ஆசை என்றும் பொருள் கூறியுள்ளார். இந் நூற்பதிப்பில் ஸ, ஷ, ஜ, க்ஷ போன்ற செத்த எழுத்துக்கள் புற்றீசல் போல் பரந்துள்ளன. மறைமலையடிகளாரின் தனித்தமிழ் இயக்கம் தமிழ்வளத்துக்கு ஊறு செய்வது என்று உணர்ந்து இத்தகைய தொண்டில் முனைந்து தமிழையும் செத்த மொழியின் நிலைக்கு உந்த முயலும் அருட் கவியாரின் அருளுள்ளம் எவ்வளவு பரந்தது என்று எண்ண, வியப்பே தோன்றும். இவரைச் சில்லாண்டுகளுக்குமுன் தமிழரே போற்றிப் புகழ்ந்தனர் என்பதை எண்ணுங்கால் தமிழனேக்கு உண்டாகும் இன்பத்துக்கும் ஓர் எல்லை இருக்குமோ?

இதனை நன்கு சிந்தித்தே மறைமலையடிகளும் ஈ. வே. ராவும் மற்ரெரு முறையும் தமிழகத்தில் தோன்ற வேண்டும் என்று விரும்புகின்றேன்.

"மொழிகளில் சிறந்தது முத்தமிழே!"

[வேலூர். ம. நாராயணன், எம்.ஏ.,]

"நிலங்களில் சிறந்தது மருதநிலம்; நீதி
நூல்களில் சிறந்தது முப்பாலே; படைக்
கலங்களில் சிறந்தது கரிப்படையே; வீசுங்
காற்றினில் சிறந்தது தென்றலாகும்!

அறங்களில் சிறந்தது இல்லறமே; பொறி
ஐந்தனுள் சிறந்தது நல்விழியே; இற்றைப்
பறவையுள் சிறந்தது தோகைமயில்; பகல்
பொழுதினில் சிறந்தது மாலை வெயில்!

பணிகளில் சிறந்தது ஆசிரியம்; இசைப்
பாக்களில் சிறந்தது தேவாரம்; பூணும்
அணிகளில் சிறந்தது அடக்கமெனில்; அக
அழகினில் சிறந்தது ஒழுக்க மன்றே!

கலைகளில் சிறந்தது இலக்கியமே; அவைக்
கனிகளில் சிறந்தது மாங்கனியே; பனி
மலைகளில் சிறந்தது இமயமெனில்; புவி
மொழிகளில் சிறந்தது முத்தமிழே!"

முன்னிலைப் பெயர்கள்

[அடிகளாசிரியன், குகையூர்]

தோற்றுவாய்

நன்னூலாசிரியராகிய பவணந்தியார் பெயர்களை உயர்திணைப் பெயர் அஃறிணைப்பெயர் பொதுப்பெயர் என வகுத்துக்கொண்டு, அவற்றுள் பொதுப்பெயர் வகைகளைக் கூறுமிடத்தே முன்னிலை ஐந்து (நன்னூல்—281) என்று ஒரு வகையினைக் குறிப்பிட்டு, அவ் வைந்துமாவன எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ என்பனவாகு மென்று (நன்னூல் 284) விரித்துக் கூறி, அவற்றுள் நீ என்பது ஒருமை; ஏனைய பன்மையாகும் (நன்னூல் 286) என்று கூறி யுள்ளார்.

இக் கட்டுரையுள் தொல்காப்பியர் முதலிய தொல்லாசிரியர் முன்னிலைப் பெயரை எத்தனை என்று கருதுகின்றனர்? பவணந்தி யார்க்கு எப்படி ஐந்தாயின? அவற்றுள் எது மூலச்சொல்? என்பன போன்றவற்றை ஆராய்ந்து எழுத முற்படுகின்றேன்.

தொல்காப்பியர் கூறும் முன்னிலைப் பெயர்ச்சொல்

தொல்காப்பியர் பெயர்ச்சொற்களை உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும் ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும் (பொதுப்பெயர்) என மூன்று வகைப்படுத்திக்கொண்டு, பொதுப் பெயர் வகைகளைக் கூறுங்கால் "நீஇரே நீயெனக் கிளந்து" (சொல்-169) என்று நீஇர், நீ என்னும் இரண்டு முன்னிலைப் பெயர்களை மட்டுமே முன்னிலையிடத்துப் பொதுப் பெயராகக் கூறி யுள்ளார். அவர் எல்லீரும் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயரைப் பொதுப்பெயருள் சேர்க்காமல் பாலறிவந்த உயர்திணைப் பெய ராகவே (சொல்-159) ஓதியுள்ளார்.

பவணந்தியார் கூறும் முன்னிலைப் பெயர்ச்சொல்

பவணந்தியார் தொல்காப்பியர் பொதுப்பெயராகக் குறிப்பிட்ட நீஇர், நீ என்னும் இரண்டுடன் அவர் உயர்திணையாக ஓதிய எல்லீர் என்பதனையும் சேர்த்துக்கொண்டு, அவற்றுடன் நீயிர், நீவிர் என்னும் இரண்டனையும் தலைப்பெய்து 'முன்னிலை ஐந்து' என்று தொகைப்படுத்தியுள்ளார். பவணந்தியார்க்கு நீயிர் நீவிர் என்னும் இரண்டும் எவ்வாறு கிடைத்தன? என்று ஆராய்வோம்.

முன்னிலைப் பன்மைப் பெயரின் மூலச் சொல்லும் திரிபுச் சொல்லும்

தொல்காப்பியர், தம் நூலுள் எழுத்ததிகாரம் புள்ளி மயங்கியலில் நும் என்னும் சொல் அல்வழியில் வருமிடத்தே நீஇர் எனத் திரிந்து நிற்கும் என்பதை,

"அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை
உக்கெட நின்ற மெய்வயின் ஈவர
இஇடை நிலைஇ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
அப்பால் மொழிவயின் இயற்கை யாகும்"

என்னும் நூற்பாவால் மிக விளக்கமாகக் கூறியுள்ளார்.

அவர் கருத்தின்படி, நும் என்பது உக்கெட ஈபெற்று நீம் என்றாகி, இ இடை நிலைஇ நீஇம் என்றாகி, ஈறுகெட, ரகரமெய் பெற்று நீஇர் எனத் திரிந்து நின்றது. இந்த *நீஇர் என்பதே முன்னிலைப் பன்மைப் பொதுப்பெயரின் பழைய வடிவாகும். (அல்வழி வடிவு).

இந்த நீஇர் என்னுஞ் சொல் யகர உடம்படுமெய் பெற்று நீயிர் என்றும், வகர உடம்படுமெய் பெற்று நீவிர் என்றும், இகரங் குன்றி நீர் என்றும் திரிந்து வழங்கத் தொடங்கிற்று. நீர் என்பது திரிபுச்சொல் என்பதை ' நீர் ஆநும் நீயிர் (நீஇர்)'' (சொல்-35) என நேமிநாத நூலாசிரியர் ஓதுவதால் உணர்ந்து கொள்ளலாகும்.

எனவே, நீ, நீஇர், எல்லீர் என்னும் பழைய சொற்களுடன் நீயிர், நீவிர், நீர் என்னும் திரிபுச் சொற்களைச் சேர்க்க முன்னிலைச் சொல் ஐந்து ஆகாமல் ஆறு ஆதலைக் காணலாம்.

யான் யாம் நாம் என்னும் தன்மைப் பெயர்கள் தன்மை ஒருமைப் பன்மைப் பெயர்ப் பொருள்களையன்றி வேறு பெயர்ப் பொருள்களைக் குறிக்க வரவில்லை. முன்னிலைப் பெயருள் நீ என்பதும் பெயர்ச்சொல்லாக வருங்கால் வேறு பொருளைக் குறிக்க வரவில்லை. நீர் என்பது படர்க்கைப் பொருளாகிய தண்ணீரையும், முன்னிலைப் பன்மைப் பொருளையும் குறிக்கிறது. நீர் என்பதைப் படர்க்கைக்கு வழங்குங்கால் இரண்டு மாத்திரை அளவுள்ளதாக நீர் என்றும், முன்னிலைப் பன்மைக்கு வழங்குங்கால் மூன்று மாத்திரை அளவுள்ளதாக ஒலியில் வேறுபடுத்தி நீஇர் என்றும்

---

* 'நீஇர்' என்பதைத் தொல்காப்பியர் நும்மின் திரிபெயர் என்றே கூறுவர். (தொல். சொல். 138)

பண்டையோர் வழங்கி வந்தனர் என்பதனை, அறிஞர் நுணுகி உணரவேண்டும். இக் காரணத்தால் முன்னிலைப் பன்மைப் பொதுப்பெயரின் பழைய வடிவம் நீர் என்பதன்று; நீஇர் என்பதே என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

நீஇர் என்பதன் ஆட்சி

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 111ஆம் நூற்பா உரையுள் இளம்பூரணர் "நீஇர் குறியிர் என்பது அம் மிகுதிமூன்று வந்தது" என்றனர். உக்கெட ஈகாரம் வந்தது ஒரு மிகுதி; இ இடை நிலை யியது ஒரு மிகுதி; ஈறுகெட ரகரப்புள்ளி வந்தது ஒரு மிகுதி; இம் மூன்றைக் கருதியே இளம்பூரணர் அம் மிகுதி மூன்று வந்தது என்று கூறினர். எனக்குக் கிடைத்த ஓலைச்சுவடியில் 'நீஇர் குறியிர்' என்றே எழுதப்பட்டிருக்கிறது. அச்சுப் புத்தகங்களில் 'நீயிர் குறியிர்' என்றே பதிப்பித்துள்ளனர் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தார் பதிப்பித்த தொல் - சொல்—தெய்வச்சிலையார் உரைப் புத்தகத்துள் "நீஇர் நீயென வருஉங் கிளவி" (சொல் - 182) என்ற நூற்பா வுள் நீஇர் என்ற வடிவத்தைக் காணலாம் ஏடெழுதுவோரிற் சிலரும், அச்சிடுவோரிற் சிலரும் கருத்தின்றி நீஇர் என்பதை நீராகவே கருதிவிட்டனர்.

நேமிநாத நூலார் நீர் என்பதைத் திரிபுச்சொல்லாகவே கொண் டுள்ளார் என்பது முன் காட்டப்பட்டுள்ளது. பவணந்தியார் நீஇர் என்பதை மூலச் சொல்லாகக் கொண்டாரா அல்லது நீர் என்பதை மூலச் சொல்லாகக் கொண்டாரா என்பது நமக்கு நன்கு விளங்க வில்லை. அவர் உருபு புணரியலில் நீர் என்பது உருபேற்குமிடத்து நும் என்று திரியும் என்று கூறியுள்ளார். "நீர்......நும் ஆம்பிற" (நன்னூல் - 246). இதனுல் நீர் என்பதனையே அவர் மூலச் சொல்லாகக் கருதியுள்ளார் என்பது நமக்கு ஒருவாறு புலனு கின்றது. ஆனுல், இது சுவடி எழுதுவோரால் நிகழ்ந்த பிழையா யிருக்கலாம்; பவணந்தியார் நீஇர் என்பதனையே மூலச் சொல் லாகக் கருதியிருக்கக்கூடும் என்று கூறினுல், தொல்காப்பியர் முன்னிலைப் பன்மைப் பொதுப் பெயரின் பழைய வடிவத்தைப் புலப்படுத்த வேண்டி "அல்லதன் மருங்கின்" (தொல் - எழுத்து - 327) என்னும் நூற்பாவால் விரித்து எழுத்தெழுத்தாகத் திரிபு ஓதினுற் போலப் பவணந்தியார் ஓதாமல் "நீர்......நும் ஆம்" என்று ஓதினமையின், அவர் கொண்ட மூலச் சொல் நீஇரா அல்லது நீரா என்பது நமக்கு விளங்கவில்லை. இந்த இடத்தில் தொல்காப்பியர் விரித்தோதியதின் அருமையை அறிஞர் நன்கு கருதி உணர்ந்துகொள்ள வேண்டும்.

பிரயோக நூலார் நீர் என்பது நீயிர் நீவிர் என ஆதேசமாம் (கெட்டுமிகல்) என்று கூறுவதை நோக்கினுல், நீர் (நீஇர் என்பது) என்பதை மூலச் சொல்லாகவும், நீயிர் நீவிர் என்பதைத் திரிபுச் சொல்லாகவும் கொண்டுள்ளார் என்பது புலனும். (ஆதேசம் என்னும் வடசொற்குக் கெட்டுமிகல் என்று பொருளிருத்தலை பிரயோக விவேக உரையால் உணர்க.)

*பவணந்தியார் நீயிர் நீவிர் என்பன எழுவாய் வேற்றுமைக்கே வரும்; ஏனைய வேற்றுமைகட்கு வராதென்று விலக்கிவிட்டு, நீர் என்பது எழுவாய் வேற்றுமைக்கு வருவதோடல்லாமல் ஏனைய வேற்றுமைகளைக் கொள்வதற்கு நும் என்று திரிந்து வரும் என்று கூறினமையின் அவரும் நீயிர் நீவிர் என்பனவற்றை மூலச் சொல்லாகக் கொண்டிலர் என்பது விளங்கும்.

இலக்கியங்களில் நீயிர் முதலியன வந்துள்ள இடம்

"நீயிர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு" (இறையனர் களவியல் உரை - 1) என்னுமிடத்திலும், "யாமவணின்று வருதும் நீயிரும்", (சிறுபாணுறு 143, பெரும்பாணுறு 28, மலைபடுகடாம் 53) என்னுமிடத்திலும், "பழுதில் காட்சியிர் நீயிருந் தொழுமென" (மணிமேகலை 10 - 70) என்னுமிடத்திலும் நீயிர் வந்துள்ளது.

நீவிர் என்னுஞ் சொல் பழைய இலக்கியங்களில் வந்துள்ளதா என்பது எனக்கு இப்பொழுது தெரியவில்லை "நீர் பாடினிர் செலினே" (புறநானூறு - 110) என்பது போன்ற பலவிடங்களில் நீர் வந்துள்ளது.

முடிபு

மேற்கூறிய காரணங்களால் முன்னிலைப்பன்மைப் பொதுப் பெயர்ச் சொல்லின் மூலச்சொல் நீஇர் என்பதே ஆகும் என்பதும், நீயிர் நீவிர் நீர் என்பன அச் சொல்லிலிருந்து திரிந்த திரிபுச் சொற்கள் ஆகும் என்பதும், எல்லீர் என்பது முன்னிலைப் பன்மைப் பெயராயினும் பொதுப்பெயர் ஆகாதென்பதும் நமக்கு விளங்குகின்றன.

———

* நீயிர் நீவிர் நான் எழ்வா யலபெறு (நன்னூல் - 293)

அருட்கவியாரின் வடமொழிப்பற்று !

இப்போது ஸ்ரீஸாதுராம் ஸ்வாமிகள் என்று அழைக்கப்படும் அருட்கவி சேதுராமன் அவர்கள் இளமை முதல் திருக்கோயில் களில் இறைவன் முன்னிலையில் இயல்பாகவே அருட்பாடல்கள் பாடும் ஓர் ஆற்றலைப் பெற்றிருந்தார். இதுகண்டு இறை அன்பர்கள் பலரும், நம் கழக ஆட்சியாளர் அவர்களும் அவர்தம் ஆற்றலைத் தெரிந்து பல திருக்கோயில்களில் அவரைப் பாடச் செய்தனர்.

அவ்வகையில் திரு. சேதுராமன் அவர்கள், திருவல்லிக்கேணி அரசடிக் கற்பகவிநாயகர், திரு சிங்காரவேலவர் ஆகிய தெய்வங் களின் மீது பல சந்தப்பாடல்கள் பாடியுள்ளார். இவர்மீது கழக ஆட்சியாளர் அவர்கள் கொண்ட பற்றின்காரணமாகச் "செந்தமிழ்ச் செல்வி"யில் இவர்தம் பாடல்களை வெளியிட்டனர்.

இங்ஙனம் தமிழ் அன்பர் பலரின் பாராட்டுதல்களுக்கு உரிய வராயிருந்த அருட்கவியார், ஸாதுராம் ஸ்வாமிகள் என்ற பட்டம் பெற்ற பின் இயல்பாகத் தமக்குள்ள வடமொழிப் பற்றை வெளிக் காட்டத் துவங்கினர். இவர் எழுதும் கடிதங்களில் வடசொற்கள் நிறையக் கலந்திருப்பது கண்டு கழக ஆட்சியாளர் வருந்தி, இது முறையன்று என்பதைச் சுட்டிக்காட்டினர்கள். அதற்கு 1971 இல் அருட்கவியார் ஆட்சியாளருக்கு எழுதிய கடிதமொன்றில்,

> தூய தமிழிலோ, மணிப்பிரவாள நடையிலோ எழுதுவது அவரவர் சொந்த விருப்பத்தைப் பொறுத்த தென்றும், அதனை யாரும், கட்டுப்படுத்த இயலாது என்றும் ஆங்கிலத்தில் எழுதித் தெரிவித்துவிட்டனர்.

அருட்கவியாரின் இந்தக் கொள்கை மாற்றம் பற்றிச் 'செந்தமிழ்ச் செல்வி' சிலம்பு 51 பரல் 3 இல், 'மறைமலையடிகளார் தனித்தமிழ் இயக்க மணிவிழா'' என்ற தலைப்பில் ஆட்சியாளர் அவர்கள் எழுதி யுள்ள கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது ஈண்டு நினைவுகூரத் தக்கது.

திருவல்லிக்கேணி அரசடிக் கற்பக விநாயகர், சிங்கார வேல வர் ஆகிய கடவுள்கள்மீது அருட்கவியார் பாடிய பாடல்கள் "அருட் புகழ் மாலை'' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. அப் பாடல் களிலும், அவற்றின் உரைகளிலும் ஏராளமான வடசொற்கள் கலந்துள்ளன. எடுத்துக்காட்டாகச் சிலவற்றை மட்டும் கீழே தருகின்றோம்.

> ஸுப்ரமணி, ஸத்யப்பொருள், ஸஞ்சாரம், குஞ்ஜரம், ஸுகோதியம், வநருகம், ஞானஸம்பந்தர், ப்ரதக்ஷிணம், ஸஹோதரன், வ்ருக்ஷம் இன்ன பிறவாகும்.

இவ்விதழில் பிறிதோர் இடத்தில், நக்கீரர் வழியடிமை, புலவர் பி. மா. சோமசுந்தரனர் அவர்கள் எழுதியிருக்கும் 'திகடசக்கரம்' என்னும் கட்டுரையும் அருட்கவியாரின் வடமொழிப் பற்றினை நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

குடந்தை மாமகம்

தமிழ்நாட்டில் குடந்தை மாநகரில் பன்னிரண்டு ஆண்டு கட்கு ஒருமுறை வியாழன் அரிமா வீட்டில் தங்கியிருக்கும் ஆண்டில் மாசித்திங்களில் மகவிண்மீனும் முழுநிலவு நாளும் ஒன்று சேரும் போது இவ்விழா கொண்டாடப்படுகிறது.

ஊழிக்கால வெள்ளத்தில் மிதந்து வந்து தங்கிய அமுத குடத்தை இறைவன் வேடவடிவந்தாங்கி வந்து வில்வளைத்து அம்பு எய்து உடைத்தார். அதனுள் இருந்த அமுதம் பலவிடங் களிலும் சிதறியது. அந்த அமுதம் பரந்து சென்று தங்கிய இடமே அமுதவாவி எனக் கூறப்படுகின்ற மாமகக் குளம் எனப் படுகிறது.

தெலுங்குநாட்டில் பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை கோதாவரியில் நீராடும்விழா நடைபெறுகிறது. அதற்குப் "புட் கரணி' என்று பெயர் கூறுகிறார்கள். வடநாட்டில் 'பிரயாகை' யில் இவ்வாறு நடைபெறும் விழா 'கும்பமேளா' என வழங்கப் படுகிறது.

சிவபெருமான் அம்புகொண்டு உடைத்தபோது குடத்தின் ஒரு பகுதி ஒரு கோணம்போல இருந்ததனால் (கும்பகோணம்) குடமூக்கு என வழங்குகின்றார்கள். (கும்பம்-குடம். கோணம்-மூக்கு)

இந்தக் குளத்தினுள் இருபது கிணறுகள் உள்ளன. அவற் றிலிருந்து ஊறிவரும் நீர் அமுதத் தன்மையுடையதாக இருப்ப தாலும் அதில் நீராடுபவருடைய தீவினைகளை நீக்கி நன்மை தரு வதனாலும் தீர்த்தமாக மதித்துக் கொண்டாடப்பெறுகிறது.

இவ்வூரில் கும்பேசர் கோயில் முதலாகச் சிவபெருமான் கோயில்கள் பலவும், மங்கலநாயகி கோயில் முதலான அம்மன் கோயில்களும், சக்கரபாணி கோயில் முதலான திருமால் கோயில் களும் உள்ளன.

பலபதிகளுக்கும் சென்று தீர்த்தங்களில் முழுகி இறை வழி பாடு செய்வது நம்நாட்டில் பண்டைக்கால முதல் நடந்து வரும் சிறப்புச்செயலாகும். பழைய தமிழ் நூல்களில் இவற்றுக்குரிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

இவ்வாண்டு மாசித்திங்கள் 18 ஆம்நாள் (1—3—80-இல்) ஏறத்தாழ முப்பது நூறாயிரம் மக்கள் குடந்தை மாநகருக்கு வந்து நீராடிப் பேறு பெற்றது நினைந்து வியந்து பாராட்டுதலுக்குரிய தாகும்.

———

தமிழில் பதிப்புக்கலை

[அ. ம. சத்தியமூர்த்தி,

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், அடையாறு]

முன்னுரை :

ஒருவர் எழுதிய செய்திக்கு நூல் வடிவம் தரும் பணியே பதிப்புக்கலை எனப்படும். இப் பதிப்புப் பணி பழங்காலத்திலேயே தமிழகத்தில் இருந்திருக்கிறது. புறநானூறு, அகநானூறு முதலான தொகை நூல்கள் அனைத்தும் இப்பதிப்புப் பணியின் விளைவே. நூல் பதிப்பின்போது நாம் மேற்கொள்ளும் சில நுட்பங்களைச் சுட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம். கட்டுரையின் செய்திகளைக் கீழ்வருமாறு பகுத்துக் காட்டலாம்.

இக் கட்டுரை அச்சுப்பொறி அறிமுகமாகுமுன் தமிழ் நூல்களின் நிலை, அச்சுப்பொறியின் அறிமுகமும் முதல் அச்சு நூலும், அச்சுக்கலையால் ஏற்பட்ட வரி, வடிவ மாற்றங்கள், நிறுத்தக் குறியீடுகள், அச்சுக்கு முன் கையெழுத்துப் படியைச் சீர் செய்தல், நூலமைப்பு என்னும் வகைப்பாட்டின் அடிப்படையில் பல்வேறு செய்திகளைத் தருகிறது. அவற்றை முறையே காண்போம்.

I. அச்சுப்பொறி அறிமுகமாகுமுன் தமிழ்நூல்கள் :

பழங்காலத்தில் எழுத்துக்களை எழுதுகோல் கொண்டு பட்டையிலும், ஓலையிலும், தோலிலும், ஈரக்களிமண்ணிலும் எழுதி வந்தனர்.

மாதவி தன்னைப் பிரிந்து சென்ற கோவலனுக்குத் தாழம்பூவின் மடலில் பித்திகையின் முகையாகிய எழுத்தாணியால் செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து மடல் வரைந்து வசந்தமாலையிடம் கொடுத்தனுப்பினாள் என்று சிலம்பு பகர்கின்றது ஆயினும் கல்வெட்டுகள், செப்பேடுகள், பனையோலைகள் முதலியவற்றில் எழுதப்பட்ட செய்திகளே நமக்குக் கிடைக்கின்றன.

அயல்நாட்டார் எழுதப்படும் பொருள்களாகக் களிமண், மூங்கிற்பட்டை, தோல், பட்டுத்துணி[1] முதலியவற்றைப் பயன்படுத்திய போதிலும் தமிழர் பனையோலையையே அதிகம் பயன்படுத்தினர்.

காகிதம் : காகிதக் கண்டுபிடிப்பே அச்சுப்பொறி கண்டுபிடிக்க வேண்டியதன் தேவையை ஏற்படுத்தியது. இக் காகிதம் முதன்

---

1. சம்பந்தன் மா. சு., அச்சுக்கலை, பக்கம் 7-12.

முதலில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆயினும் கி. பி. பதினோராம் நூற்றாண்டளவிலேயே இந்தியாவிற்குள் சில அராபியர்களால் அது அறிமுகப்படுத்தப்பட்டது.[2] இவ்வாறு அயல் நாட்டாரின் அறிவியல் தாக்கம் நம்மிடம் ஏற்பட்ட போதும் ஓலையையே நம்மவர் பயன்படுத்தி வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

II. அச்சுப்பொறியின் அறிமுகமும் முதல் அச்சு நூலும் :

பல பொருள்களில் எழுதி வந்தோர் விரைவில் படிகளை எடுத்து அவற்றை வெளிக்கொணர வேண்டுமென்று எண்ணினர். அச்சுக்கலை கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னரே, அதன் அடிப்படையாக இலச்சினையும் முத்திரையும் பாபிலோனியாவில் களிமண் தட்டில் பொறிக்கப்பட்டது.[3] தமிழகத்திலும் காவிரிப்பூம் பட்டினத்தில் இறக்குமதியான பொருள்களின்மீது புலிச்சின்னம் பொறித்துப் புறம் போக்கியதையும் பட்டினப்பாலை தெளிவுறுத்துகின்றது.[4]

கி. பி. 1450ஆம் ஆண்டு கூட்டன்பர்க்கு என்ற செர்மானியர் முதன்முதலாக அச்சுப்பொறி கண்டார். ஆயினும் தமிழக வரலாற்றில் அச்சுக்கலை கி. பி. பதினாறும் நூற்றாண்டிலிருந்து தான் இடம் பெற்றது. கொச்சியிலுள்ள அம்பலக்காடு என்னும் பகுதியில் கி. பி. 1550இல் ஏற்பட்ட ஏசு சபையின் அச்சகத்தில் தான் மரத்தில் செதுக்கிய தமிழ் எழுத்துக்களைக் கொண்டு முதலில் தமிழ்நூல் வெளியிடப்பட்டது.

அடுத்து கி. பி. 1556ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆறும் தேதி கோவா நகருக்கு வந்த போர்த்துகீசியக் கப்பல்தான் முதன் முதலில் அச்சுப் பொறிகளையும் அச்சடிப்பாளர்களையும் நம் நாட்டிற்குக் கொண்டு வந்தது. இவர்கள் அதே ஆண்டில் கோவாவில் முதல் அச்சுக்கூடத்தை நிறுவினர். ஆயினும் தமிழ்நூல் எதுவும் அதில் அச்சானதாகத் தெரியவில்லை.[5] ஆனாலும் அதற்கு இரண்டாண்டுகட்கு முன்பே, அஃதாவது கி. பி. 1554இல் போர்த்துகீசியத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட 'முதல் லூசோ தமிழ்ச்சமய வினாவிடை' என்ற புத்தகம் லிஸ்பன் நகரில் அச்சானது. இந்தப் புத்தகத்தின் பதிப்பில் தமிழ் எழுத்துக்கள் ரோம வரிவடிவத்தில் உள்ளன.

---

2. சம்பந்தன் மா. சு., அச்சுக்கலை, பக்கம் 23.
3. சம்பந்தன் மா. சு., அச்சுக்கலை, பக்கம் 41.
4. உருத்திரங்கண்ணனார் கடியலூர், பட்டினப்பாலை அடி 135.
5. அருணாசலக் கவுண்டர் கு., 'பழந்தமிழ்ப் பதிப்புகள்', தமிழ் வட்டம், பக்கம் 245.

ஹென்றி குவிஸ் பாதிரியாரும், மானுவல் - டி சாவோ பெட்ரோ பாதிரியாரும் மொழி பெயர்த்து கி. பி. 1578இல் கொல்லத்தில் 'கிறித்தவ வினு விடை' என்ற நூலை வெளியிட்டனர். இச் சிறிய நூலே இந்தியாவின் நாட்டுமொழி ஒன்றில் முதன்முதலாக வெளியான நூலாகும். மேலும் இந்தியாவில் அச்சான முதல் புத்தகம் இத் தமிழ்ப் புத்தகமே.[6]

அடுத்து சீகன்பால்கு என்பவர் செர்மனியிலிருந்து ஓர் அச்சு இயந்திரத்தையும், சில தமிழ் எழுத்துக்களையும் இறக்குமதி செய்து கி. பி. 1713இல் தஞ்சை மாவட்டம் தரங்கம்பாடியில் தமிழ்நாட்டில் முதல் அச்சுக்கூடம் ஏற்படுத்தினர். இதன்கண் 'முதலடியார் சமயம்' என்னும் நூல் முதலில் அச்சிடப்பட்டது.[7]

இவ்வாறு அச்சு இயந்திரங்கள் ஏற்பட்டபோதும் பல நூல்கள் தொடக்க காலத்தில், அச்சாகவில்லை. ஆங்கிலக் கல்வி மோகம், தமிழ்க்கல்வி வருவாய் தராது என்ற தாழ்வு மனம், சுதேசிகள் அச்சியந்திரம் வைக்கக்கூடாது என்ற சட்டம் முதலானவற்றை நூல்கள் பல அச்சாகாமைக்குக் காரணங்களாக்கலாம்.

கி. பி. 1835இல் சுதேசிகள் அச்சியந்திரம் வைக்கக்கூடாது என்ற சட்டம் நீக்கப்பட்டபிறகே, நம்மவர்கள் அச்சியந்திரம் நிறுவி, ஏட்டுச்சுவடிகளாக இருந்த பழைய நூல்களையும், புதிய நூல்களையும் பதிப்பிக்கும் பணியில் இறங்கினர்.

III. அச்சுக்கலையால் ஏற்பட்ட வரி, வடிவ மாற்றங்கள் :

தமிழ் எழுத்துக்கள் இப்போதிருக்கும் வடிவத்தை ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளாகத்தான் பெற்றிருக்கிறது. மேலும் கையெழுத்துப் படிகள் கி. பி. பதினேழாம் நூற்றாண்டுக்குமுன் கிடைப்பது அரிது. ஓலைகளில் காணப்படும் தமிழ் எழுத்துக்கள் பெரிதும் சேர்த்து எழுதப்பட்டவையாகக் காணப்படுகின்றன. கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்துக்கள் விட்டுவிட்டுப் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அச்சில் வந்த நூல்களை எளிதாகப் படித்து ஆராய்ச்சி புரிதல் மிகவும் தொல்லையான செயலாகும்[8] இலக்கணப் பதிப்புகளில் சூத்திரமும் உரையும் ஒரே வகை எழுத்தில் அமைக்கப்பட்டிருக்கும். (தொடரும்)

6. சம்பந்தன் மா. சு., அச்சுக்கலை, பக்கம் 144.
7. சம்பந்தன் மா. சு., அச்சுக்கலை, பக்கம் 147.
8. விளக்கத்திற்குத் தொல்-எழுத்து-நச்சினர்க்கினியர் உரை-மழவை மகாலிங்கையரின் பதிப்பைக் காண்க

இந்தியாவில் ஞாயிறு மறைவு

இந்நூற்றுண்டின் வானவியல் விந்தை நிகழ்ச்சியான முழு ஞாயிறு மறைவு (சூரிய கிரகணம்) கடந்த பிப்ருவரித் திங்கள் 16 ஆம் நாள் பிற்பகல் நிகழ்ந்தது. 1898க்குப் பிறகு 82 ஆண்டுகள் கழித்து இந்தியாவில் இஃது ஏற்பட்டது.

கதிரவன் ஒளி நிலவுலகத்தின் மீது விழுவது இயற்கை. இவ்விரண்டிற்கும் இடையில் நிலவுக்கோளம் ஒளிப்பாதையின் குறுக்கே தோன்றுமாயின் ஞாயிறு மறைவு ஏற்படும். அப்போது நிலவின் நிழல் நிலவுலகில் வீழும். அந்நிழல் காரணமாகச் சற்று இருள் தோன்றும்.

13,92,000 கி. மீ. விட்டமுள்ள கதிரவனை 35,00 கி. மீ. விட்டமுள்ள நிலவால் மறைக்க முடியாதென்பது உண்மை. இருப்பினும் நிலவின் அளவிற்கு நிலவுலகில் நிழலை உண்டுபண்ண முடியுமல்லவா? அதுவே 'ஞாயிறு மறைவு' எனப்படுவது.

இந்திய நாட்டில் ஏறத்தாழ 130 கி. மீ. அகலமுள்ள ஒரு பாதையில் முழுக் கதிரவன் மறைவு ஏற்பட்டது. இந்தியாவின் பிற பகுதிகளில் கதிரவனின் பெரும்பகுதி மறைந்து காணப்பட்டது. சென்னையில் 90 விழுக்காடு மறைவு நிகழ்ந்தது.

இவ் வியத்தகு நிகழ்ச்சியை நேரில்கண்டு ஆராய மேலை நாட்டு அறிவியல் அறிஞர்கள் நூற்றுக்கணக்கில் பல்வகைக் கருவிகளுடன் இந்தியாவிற்கு வருகை தந்தனர்.

ஞாயிறு மறைவு நேரத்தில் கதிரவனிலிருந்து வெளிப்படும் ஒளி அதனை நேரில் பார்ப்பவர் கண்களைக் கெடுத்துவிடும் என்று கண்மருத்துவர்கள் கூறியதற் கிணங்க இந்தியநாடு முழுவதிலுமுள்ள அனைத்துப் பணிமனைகளும் விடுமுறையளித்தன. அதனால் ஆள்நடமாட்டமற்ற தெருக்களை இந்திய நகரங்கள், பேரூர்கள், சிற்றூர்கள் முழுவதிலும் காண முடிந்தது.

பிற்பகல் 2. 30 மணியளவில் ஞாயிறு மறையத் தொடங்கி 3. 45 மணியளவில் முழுஅளவும் மறைந்து, இறுதியாக 4·50 மணியளவில் மீண்டும் மறைந்த கதிரவன் முழுத்தோற்றமளித்தான்.

முழு அளவு மறைவு ஏற்பட்ட நேரத்தில் தெருக்களில் பால் நிலா காய்ந்தது போன்றிருந்தது. குளிர்ந்த காற்றும் வீசியது. இந்தியாவின் சில பகுதிகளில் வானில் விண்மீன்கள் பகலிலேயே கண்களுக்குப் புலப்படலாயின. கதிரவன் மறைந்துவிட்டானென்று எண்ணிப் பறவைகள் கூடு திரும்பலாயின. மக்கள் அனைவரும் தத்தம் வீடுகளுக்குள்ளும் மறைவிடங்களிலும் தங்கியிருந்தனர். வண்டிப் போக்குவரத்து அனைத்து ஊர்களிலும் அந்நேரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

ஞாயிறு மறைவின்போது கதிரவனை நேராகப் பார்க்கக் கூடாது என்ற எச்சரிக்கை விடுக்கப் பெற்றிருந்தும் ஆங்காங்கு ஒரு சிலர் நேரில் பார்த்துக் கண்பார்வையில் கோளாறு உற்றனர். ஓரிருவரைத்தவிர மற்றவர்கள் நோய் நீங்கப்பெற்றனர்.

கோட்டையூர் மு. அழ. அழகப்பச் செட்டியார் மறைவு

செட்டிநாட்டு வள்ளல் அழகப்பச் செட்டியார் அவர்களின் நெருங்கிய உறவினரும் பெருந்தொழிற் செல்வருமான காரைக் குடியை அடுத்த கோட்டையூரைச் சார்ந்த மு. அழ. அழகப்பச் செட்டியார் அவர்கள் 29—2—1980 அன்று பெங்களூரில் மறை வுற்றார்கள். செல்வக் குடும்பத்தில் தோன்றியிருப்பினும் இளமை யில் குடும்பப் பொருள்நிலை சீர் குலைந்தபோது உளந்தளராது கடு மையாக உழைத்து வாழ்வில் பெருஞ் செல்வத்தை ஈட்டியவர் இப்பெருந்தகையார்.



15—6—1912இல் தோன்றிய அழகப்பச் செட்டியார் இளமை யிலிருந்தே கடும் உழைப்பிற்கு அஞ்சாதவர். திருச்சியில் சிறிய அளவில் துணி வாணிகத்தைத் தொடங்கிய இவர் படிப்படியாக உயர்ந்து பெங்களூரில் 'சாமுண்டி பட்டுத் தொழிற்சாலை'யை முதன் முதல் நிறுவினார். அதில் தயாரான பெங்களூர்ப் பட்டுக்கு வடநாட்டில் பெரும் வரவேற்பு இருந்தது. பின்னர்ப் பெருகி வளர்ந்தது. மக்கட் செல்வம் பெருகிய நிலையில் அவர்கட்காகப் புதிய தொழிற்சாலைகளைப் பெங்களூரில் நிறுவினார். அட்டைப் பெட்டித் தொழிற்சாலை, வண்ணமேலுறைகள் தயாரிக்கும் தொழிற் சாலை என இரு பெரிய தொழில் நிலையங்களை அமைத்துத் திறம் பட நடத்தி வந்தார். அத்துடன் குடகு நாட்டில் காப்பித் தோட் டம் ஒன்றையும் பெரிய அளவில் நடத்தி வந்தார்.

சற்று வயது முதிர்ந்த நிலையில் செட்டியாரவர்களுடைய எண்ணம் அறப்பணிகளில் ஈடுபட்டது. தம்முடைய சொந்த ஊரான கோட்டையூரில் சிறந்த பள்ளிக்கூடம் இல்லாத குறை

யைப் போக்குவதற்காக 'முத்தையா அழகப்பா மேனிலை உயர் நிலைப்பள்ளி' ஒன்றைப் பல நூறாயிரம் ரூபாய் செலவிட்டுத் திறம் பட அமைத்தார். காரைக்குடி சுற்று வட்டாரத்திலேயே சிறந்த ஆங்கிலவழிப் பள்ளியாக இது தற்போது திகழ்கின்றது.

செட்டியார் அவர்களுக்கு ஆழ்ந்த சமயப் பற்றும் உண்டு. ஆண்டுதோறும் குடகு நாட்டில் காவிரி தோன்றும் தலைக்காவிரிக் கட்டத்தில் காவிரி பிறக்கும் நாளன்று அதில் நீராடவரும் பல்லா யிரக்கணக்கான மக்களுக்கு அவர் உணவுப் பொட்டலங்களை வழங்கி வந்தார். பல ஆண்டுகளாக இத் திருப்பணி நடைபெற்று வருகின்றது. 30கி.மீ. சுற்றளவில் உணவுவிடுதியே இல்லாத மலைக் காட்டுப் பகுதியில் உரிய காலத்தில் உண்டி வழங்கி உயிர் வளர்க் கும் பணியைக் குடகுமக்களும் செட்டிநாட்டுப் பெருமக்களும் போற் றுவதுண்டு.

ஒவ்வோராண்டும் துணைவியாருடன் திருவண்ணாமலைக்குச் சென்று கார்த்திகை விளக்கீட்டு விழாவில் கலந்து கொள்வார். அண்ணாமலையார்மீது ஆராக் காதல் பெற்றுத் திகழ்ந்தார்.

இவருடைய அறப்பணிக்கு உறுதுணையாக இருந்தவர் இவர் தம் இல்வாழ்க்கைத் துணைவியராகத் திகழ்ந்த ஆச்சி அவர்கள். சென்ற ஆண்டு அவ்வம்மையார் திடுமென மறைவுற்றது செட்டி யாரவர்கட்குப் பேரிழப்பானது.

இவ்வளவு வசதி படைத்த செட்டியாரவர்கட்கு ஆண்மக்கள் நால்வரும் பெண்மக்கள் நால்வரும் உள்ளனர். அன்புடைய பேரக் குழந்தைகளும் உள்ளனர். அவர் 'குமரி மலர்' திரு. ஏ. கே. செட்டியார் அவர்கட்கு நெருங்கிய உறவினரும் உற்ற நண்பரும் ஆவார்.

அழகப்பச் செட்டியார் தொடங்கி வைத்துள்ள அறப்பணிகளை அவருடைய மக்கள் தொடர்ந்து செய்யும் ஆர்வம் கொண்டுள் ளனர். சென்னை மறைமலையடிகள் நூல் நிலையத்தைக் கண்டு செட்டியார் அவர்கள் வியந்து பாராட்டியுள்ளனர். சென்னை வரும் போது நூலகத்திற்கும் வருகை தருவார். அதன் வளர்ச்சியில் பெரிதும் ஈடுபாடு கொண்டு விளங்கினர். அதற்குத் தக்க பொரு ளுதவி செய்வதாகத் திரு. ஏ. கே. செட்டியாரவர்களோடு வந்த போது மனமுவந்து தெரிவித்தனர். அவர்கள் மக்கள் தம் தவத் தந்தையாரின் அருளுள்ளக் கருத்தை நிறைவேற்றி ஆவியுலகில் வாழும் அவர்கள் மனமுவக்கச் செய்வார்கள் என்று நம்புகிறோம்.

இத்தகு அருளுள்ளத்துடன் அறப்பணிகளில் ஈடுபட்டுப் பல நல்ல பணிகளைச் செய்த அவர்தம் ஆன்மா இறையடியில் இன் புற்று அமர்வதாக. அவரைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத் தார்க்கு எமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நெல்லைக் குமரகுருபரர் குழந்தை வளர்ப்புப் பள்ளி
12 ஆவது ஆண்டு விழா (17—2—'80)



கழக ஆட்சியாளர், அவர்தம் இல்லத்தரசியார்,
விழாத் தலைவர் திரு. சி. துரைராஜ், அவர்தம் இல்லத்தரசியார்,
திரு. க. வா. முத்தையா ஆகியோர்
விழா மேடையில் காணப்படுகின்றனர்.



கழக ஆட்சியாளரும், விழாத் தலைவரும் பிறரும்
சிறுவர் கலை நிகழ்ச்சியைக் கண்டு களிக்கின்றனர்.

செய்திகளும் குறிப்புக்களும்

குமரகுருபரர் குழந்தை வளர்ப்புப் பள்ளி 12ஆவது ஆண்டு விழா

திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் அறநிலையங்களில் ஒன்றான தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 1967ஆம் ஆண்டு மனிதருள் மாணிக்கம் நேரு பிறந்தநாளாகிய நவம்பர்த் திங்கள் 14ஆம் நாளில் குமரகுருபரர் குழந்தை வளர்ப்புப் பள்ளி துவக்கப்பட்டது. இந்நாளை முன்னிட்டு இவ்வாண்டு பிப்ருவரி 17ஆம் நாள் 12வது ஆண்டு விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு நெல்லை மாவட்டக் காவல்துறைத் துணைப் பொது மேலர் உயர்திரு. C. துரைராஜ் எம்.ஏ., பி.எல்., ஐ. பி. எசு. அவர்கள் தலைமை தாங்கினார்கள். தலைவர் சிறப்புரை ஆற்றும்போது சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், நூற்பதிப்புக்கென ஆற்றும் பணியையும், அந்நூல்களின் சிறப்பையும் பாராட்டிப் பேசினார்கள். இளஞ் சிறார்கள் வியக்கும்படி நிகழ்த்திக் காட்டிய கலை நிகழ்ச்சிகளையும் கண்டு உள்ளம் மகிழ்ந்தார்கள். விழா முடிவில் திருவாட்டி கோதை நாச்சி துரைராஜ் அவர்கள் மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்கள். விழாவுக்குக் கழக ஆட்சியாளரும் அவர்தம் துணைவியாரும் வந்திருந்தனர். நாட்டுப் பண்ணுடன் விழா இனிது முடிந்தது.

பெரிய புராணத் தொடர் விளக்க உரை

வாழ்வியற் புலவர் தவத்திரு சொ. தேமொழியார் அவர்கள் 4—4—80 முதல், சிந்தாதிரிப்பேட்டை அருள்மிகு ஆதிபுரீசுவரர் அறநிலையத்தில், அருள் மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளபடி வெள்ளிக்கிழமைதோறும் மாலை 7 மணி முதல் 8-30 மணி வரை பெரிய புராணத் தொடர் விளக்கவுரை நிகழ்த்துவார். அன்பர்கள் வந்து கேட்டு இன்புறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சங்கப் புலவர் விழா

காரைக்குடி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 24—2—80 இல், காரைக்குடி மீனாட்சி உயர்நிலைப்பள்ளியில் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில், இரண்டாவது சங்கப் புலவர் விழா நடைபெற்றது. முனைவர் இரா. சாரங்கபாணி மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து, திரு. சா. கணேசன், முனைவர் வ. சுப. மாணிக்கம், திரு. க. வெள்ளைவாரணனார், முனைவர் சி. பாலசுப்பிரமணியம் மற்றும் அறிஞர்கள் சிலர் உரையாற்றினர்.

சேலம் திருக்குறள் மாநாடு

20—1—80 இல், சேலம் மாவட்ட திருக்குறள் பேரவையின் சார்பில், பொங்கல் விழாவும் திருக்குறள் மாநாடும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. திருக்குறள் பீடாதிபதி அருட்திரு அழகரடிகள் விழாக்களுக்குத் தலைமை தாங்கினார். அவர் தம் உரையில் திருக்குறள் தெய்வநூல் என்பதை விளக்கிப் பேசினார். அடுத்து திரு. கோ. மு. முத்துசாமிபிள்ளை, ஐ.ஏ.எசு அவர்கள் பேசுகையில் அழகரடிகளின் பணிகளைப் பாராட்டியும், வள்ளுவர் கோட்டத்தைத் 'திருவள்ளுவர் கோட்டம்' என்று வழங்கலாம் என்றும் குறிப்பிட்டனர். பின்னர்க் கருத்தரங்கில் முனைவர் ஔவை. நடராசன் அவர்களும், மற்றும் அறிஞர்கள் இருவரும் உரையாற்றினர். இவ் விழாக்களை யொட்டிப் பொருட்காட்சி யொன்றும் அமைக்கப்பட்

டிருந்தது. ஔவை நடராசனார், தியாகி முத்தையா, செ. கந்தசாமி செட்டியார், சின்னண்ணார் அருணாசலனார் ஆகியோர் 'திருக்குறள் தொண்டர்' பட்டம் வழங்கப்பெற்றதுடன் பொன்னாடையும் போர்த்திச் சிறப்பிக்கப்பெற்றனர்.

பெண்ணாகடம் சமயப் பேரவை சிவபூசை திருமுறை மாநாடு

பெண்ணாகடம் சமயப் பேரவையின் சார்பில் 14—2 80 சிவனிரவு அன்று, அருள்மிகு பிரளயகாலேசுவரர் திருக்கோயிலில் சிவபூசை திருமறை மாநாடு நடைபெற்றது. சென்னைக் கிறித்தவக் கல்லூரிப் பேராசிரியர் க. வடிவேலாயுதனார் மாநாட்டுக் கொடியினை ஏற்றிவைத்தார். பேராசிரியர் திரு. பெ. திருஞானசம்பந்தம் எம். ஏ., எல். டி. அவர்கள் தலைமை தாங்கி நீண்ட சமயச் சொற்பொழிவாற்றினார். திரு. ச. முத்துக்குமாரசாமிபிள்ளை அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். மறை திருநாவுக்கரசு அவர்கள் சிறப்புரை ஆற்ற மாநாடு இனிது முடிந்தது.

முனைவர் உ. வே. சாமிநாதையர் 125 ஆம் ஆண்டு விழா

19—2—80 இல், சென்னைக் கலைவாணர் அரங்கில் முனைவர் உ. வே. சா. அவர்களின் 125 ஆம் ஆண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. முனைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு அமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் 'சின்ன மகிபன் குளுவ நாடகம்' என்னும் நூலை வெளியிட்டனர். அமைச்சர் இராசா முகமது, திருமுருக கிருபானந்தவாரியார், ஔவை நடராசன், மற்றும் அறிஞர்கள் சிலர் உரையாற்றினர்.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(செல்வி சிலம்பு ௫௪-௮ ௧௬ ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு.	வ. சுப்பையாபிள்ளை அவர்கள் கழக ஆட்சியாளர்	10—00
,,	Dr. நன்னன் அவர்கள் சென்னை-1. (தந்தையார் நினைவுநாள் நன்கொடை)	25—00
,,	ஆ. சுப்பையாபிள்ளை அவர்கள், கழக மேலாளர்	5—00
,,	A. T. A. ஈசுவர் அவர்கள், சென்னை	5—00

மதிப்புரை

திரையல் சுருள்கள்

[ஆசிரியர்: புலவர் செங்கைப் பொதுவன் எம். ஏ., எம். லிட். 6, 13-வது தெரு, தில்லை கங்காநகர், சென்னை-61 விலை: ரூ. 6—00]

ஆறு நாட்டான் உலா, அருள்தரு சுனைகள், அகப்பால் உணர்வுகள், அரங்க ஒலிகள், ஆன்றோர் சுவடுகள், ஆற்றின் ஊற்றுகள் என ஆறு தலைப்புகளில் வரும் கவிதைகள் அனைத்தும் கற்பனை வளமும், கவிதை நயமும், பொருட் சிறப்பும் பொருந்தினவாய் சுவைமிக்க சுருள்களாய் அமைந்துள்ளன. பாடல்கள் தமிழின மேம்பாட்டுக்குத் துணைபுரியும் வண்ணம் அமைந்திருத்தல் பாராட்டற்குரியது.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா

'செந்தமிழ்ச் செல்வி' பற்றிய உரிமை விளக்கம்—1956 ஆம் ஆண்டுச் சட்டம் - விதி 8 - படிவம் 4 இல் கண்டுள்ளபடி

---

1. வெளியிடும் இடம் : 79, பிரகாசம்சாலை, (பிராட்வே) சென்னை 1.
2. வெளியீட்டு முறை : திங்களிதழ்
3. அச்சிடுவோர் பெயர் : அப்பர் அச்சகம்
   இனம் : இந்தியர்
   முகவரி : 80, பிரகாசம்சாலை, சென்னை-1
4. வெளியீட்டாளர் பெயர் : திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.
   இனம் : இந்தியர்
   முகவரி : 79, பிரகாசம்சாலை, சென்னை-1
5. ஆசிரியர் பெயர் : திரு. வ. சுப்பையாபிள்ளை
   இனம் : இந்தியர்
   முகவரி : 79, பிரகாசம்சாலை, சென்னை-1
6. இதழ் உரிமையாளர்கள், மூலதனத்தில் நூற்றுக்கு ஒரு விழுக்காட்டிற்கு மேற்பட்ட பங்குடைய பங்காளிகள் ஆகியோரின் பெயர்களும் முகவரிகளும்:

1. திரு. T.S. இராமலிங்கம் பிள்ளை, M. A., B. L.
   ஓய்வு பெற்ற சட்டத்துறைச் செயலாளர்.
   பி. 11, ஏ. செக்டர் மகாநகர், லக்னோ.
2. திரு. வ. சுப்பையா பிள்ளை
   91, பவழக்காரத் தெரு, சென்னை-1.
3. திருமதி சு. மங்கையர்க்கரசி
   91, பவழக்காரத் தெரு, சென்னை-1.
4. திரு. R. M. K. S. கோபாலகிருஷ்ண பிள்ளை
   வணிகர், சாத்தான் குளம்,
   (திருநெல்வேலி மாவட்டம்)
5. திரு. M. K. சிவகாமிநாத பிள்ளை
   C/o R. M. K. V. சன்ஸ்,
   வடக்குரதவீதி, திருநெல்வேலி-6.
6. திரு. N. S. சுந்தரம், பார்-அட்-லா,
   134, தெற்கு இராச வீதி, தூத்துக்குடி.
7. திரு. மு. காசிவிசுவநாதன் செட்டியார்
   வங்கியார், பாகனேரி, (இராமநாதபுரம் மாவட்டம்)

8. திருமதி கா. லட்சுமி ஆச்சி
(திரு. காசிவிசுவநாதன் செட்டியார் மனைவி)
பாகனேரி.

9. திரு. பெரி. அழ. மு. நா. நாராயணன் செட்டியார்
உரிமையாளர், பாரி அச்சகம், 66, பிரகாசம் சாலை, சென்னை-1

10. திரு. மு. ஆறுமுகம்
15. பெருமாள் வடக்கு மாடத்தெரு,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2.

11. திருமதி க. வடிவழகி
(திரு. இரா. கலியாணசுந்தரம் மனைவி)
2, மேட்டுத் தெரு, சென்னை-1.

12. திருமதி. மு. வயிரமணி
(திரு. இரா. முத்துக்குமாரசாமி மனைவி)
2, மேட்டுத் தெரு, சென்னை-1.

13. திருமதி பழ. மீனாட்சி ஆச்சி
(திரு. S. M. பழனியப்ப செட்டியார் மனைவி)
11, ரட்லண்ட் கேட், 2-வது தெரு,
சென்னை-6.

14. திரு. S. Ct. சிதம்பரம் செட்டியார்
162, அவினாசிசாலை, கோயமுத்தூர்-1.

15. திரு. A. Kn. அருணாசலம்
(திரு. கண்ணப்பசெட்டியார்புதல்வர்) நாயனார்குளத்தெரு,
நாட்டரசன் கோட்டை, (இராமநாதபுரம் மாவட்டம்).

16. திருமதி T. S. J. தனலட்சுமி அம்மையார்
(திரு. T. S. ஜம்புலிங்கம் செட்டியார் மனைவி)
திருப்பூர் இல்லம், கோயமுத்தூர்.

17. திரு. Rm. K. Rm. இராமசாமி செட்டியார், வங்கியார்,
திட்டை, (தஞ்சை மாவட்டம்)

18. திரு. இரா. கலியாணசுந்தரம், பி. எஸ்ஸி.
2, மேட்டுத்தெரு, சென்னை-1.

19. திரு. இரா, முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி, லிட்
2, மேட்டுத்தெரு, சென்னை-1.

மேலே தரப்பட்டுள்ள விளக்கங்கள் அனைத்தும் என்னுடைய முழு நம்பிக்கைக்கும் அறிவுக்கும் ஏற்ப உண்மையானவை என வ. சுப்பையா பிள்ளையாகிய யான் உறுதியளிக்கிறேன்.

10—3—1980 (ஒப்பம்) வ. சுப்பையா பிள்ளை
பதிப்பாளர்

கழகப் புதிய வெளியீடுகள்

நெல்லைக் குடைவரைக் கோயில்கள்

ஆசிரியர் : தி. இராசமாணிக்கம், பி. ஏ., பி.காம்., விசாரத்

நெல்லை முதலான பல ஊர்களில் உள்ள மலைகளைக் குடைந்து உருவாக்கப்பெற்ற கோயில்களைப் பற்றிய காட்சிகள் இந்நூலின்கண் விளக்கப்பட்டுள்ளன. அவை சுற்றுலாச் செல்வோர் கண்டுகளிக்கக் கூடிய காட்சிகளாக மட்டுமின்றி, ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படும் வகையிலும் உள்ளன. முன்னாள் அறநிலைய ஆணையர் உயர்திரு அ. உத்தண்டராம பிள்ளை அவர்கள் அணிந்துரையுடன் படங்களும் கூடியது.

விலை ரூ 5—00

ஒரே ஒரு வழி (இந்திய அரசின் பரிசு பெற்ற நூல்)

ஆசிரியர் : புலவர் ச, தமிழ்வேலன், க. மு.

முதியோர் கல்வித் திட்டத்தின் அடிப்படையில் எழுதப் பெற்றுள்ள இந்நூலில் ஆடவரும் பெண்டிரும் மணவாழ்க்கை யில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளையும், மகப்பேறு பற்றிய அரிய கருத்துக்களையும் இனிய எளிய தமிழ் நடையில் விளக்குகிறார் இந் நூலாசிரியர். விலை ரூ. 3—50

கழக இலக்கியச் செம்மல்

புலவர் இரா. இளங்குமரன் எழுதிய
அரிய நூல்கள் மூன்று

மதுரைக் கோயில் வரலாறு

மதுரை மீனாட்சி, சொக்கநாதர் கோயில்கள், பொற்றாமரைக் குளம் ஆகியவற்றின் அமைப்பு, மாண்பு, திருவிளையாடற் புராணச் சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியன பற்றி, உரையாடல் முறையில் இனிய தமிழில் அமைந்த பயனுள்ள வரலாற்றுநூல். அறநிலைய ஆணையர் உயர்திரு மா. சுப்பிரமணியம் அவர்கள் அணிந்துரையுடன் படங்களும் கூடியது. விலை ரூ. 6—00

வளர்புகழ் வள்ளுவம்

திருக்குறள் உலகப் புகழ்பெற்றது. அதன் அருமை பெருமைகள் அளப்பில. எனினும் அவற்றைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் முறையில் தொகுக்கப்பட்ட கருத்துரைகளின் தொகுப்பே இந்நூல். திருக்குறள் பற்றிய ஆராய்ச்சிக்கு இந்நூல் துணைபுரியும். விலை : ரூ. 2—00

தமிழ் இலக்கியத்தில் இயற்கை ஓவியம்

தமிழிலக்கியத்தில் வரும் விலங்கினங்களின் வியத்தகு பண்புகளை விளக்கும் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். இதில் விளக்கப்படும் காட்சிகள் நேரில் காண்பன போன்று சுவைபட அமைந்துள்ளன. உயிர் நூல் புலவர்கட்கும், ஆராய்ச்சியாளர்க்கும் இந்நூல் துணைபுரியும். விலை ரூ 4—00

அப்பர் அச்சகம், சென்னை-1.